# அல் அதர் இஸ்லாமிய மாதாந்த சஞ்சிகை

மலர் : 01 இதழ் : 06 மே 2009

## இவ்விதழில்...

@ *கவனிப்பாரற்று விடப்படும் கண்ணியவான்கள்.*

ஆசிரியர்

@ *நல்லடியார்களின் பொருட்டால் ...*

ஸஹ்றான் (மஸ்ஊதி)

@ *ஷீஆக்களின் வலையில் சிக்கிய ...*

அபூ அஸ்பாக் அல் அதரி

@ *நபிகளாரின் செயற்பாடுகளை புரிந்து ...*

அபூ அஹ்மத் அல் அதரி

@ *நபிவழிக்கு முரணான மத்ஹபுச் சட்டங்கள்.*

அஸ்பர் (பலாஹி)

@ *இஸ்லாத்தின் பார்வையில் இத்தா கடமையும்...*

அஸ்பர் (பலாஹி)

@ *நிரந்தர நரகத்தினைப் பெற்றுத்தரும் தற்கொலை.*

முஹம்மட் அர்ஷாத் அல் அதரி

@ *பெருவெடிப்புக் கொள்கையும் ...*

முஹம்மட் அர்ஷாத் அல் அதரி

@ *இல்லற வாழ்வும் இன்னல்களும்.*

நஷ்மல் (பலாஹி)

@ *சோதனையில் சாதனை.*

அபூ அஹ்மத் அல் அதரி

@ *சிலதை ஏற்று சிலதை நிராகரிப்போர் யார்.*

விமர்சன விளக்கம்

*@ தஸ்பீஹ் மணியால் திக்ர் செய்யலாமா?*

சந்தேகங்களும் தெளிவுகளும்

**ஆசிரியர் பக்கம்**

# கவனிப்பாரற்று விடப்படும் கண்ணியவான்கள்...

**"அல்லாஹ்வை நோக்கி (மக்களை) அழைத்து நல்லறம் செய்து 'நான் முஸ்லிம்' என்று கூறியவனை விட அழகிய சொல்லைக் கூறுபவன் யார்?"** (அல்குர் ஆன் 41:33)

இஸ்லாத்தின் அடிப்படைக் கோஷங்களில் ஒன்றே அதான் எனும் அழைப்பு. இவ்வழைப்பு அல்லாஹு அக்பர் (அல்லாஹ் மிகப் பெரியவன்) எனும் நாமத்தோடு தொடங்கி 'லாஇலாஹ இல்லல்லாஹு' (வணக்கத்துக்குரியவன் அல்லாஹ்வைத் தவிர யாருமில்லை) எனும் வாசகத்தோடு முடிவடைகின்றது. தினமும் ஐவேளைத் தொழுகைக்கான அழைப்பாக இவ்வாசகங்களை நாம் பயன்படுத்தி வருகின்றோம். உயர்ந்தோனாகிய அல்லாஹ்வையும், மாமனிதர் நபிகளாரையும் நினைவு கூர்ந்து மக்களை நன்மையின் பால் விரைந்து வருமாறு கூறும் நல்ல பல அர்த்தங்களை உள்ளடக்கிய அதானுக்கும் அதை மொழியும் அழைப்பாளர் முஅத்தினுக்கும் அதிகமான சுபசோபன செய்திகளை அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் எமக்குக் கற்றுத் தந்துள்ளார்கள். **"நாளை மறுமை நாளில் மக்களிலேயே நீண்ட கழுத்து உடையவர்களாகத் தொழுகை அறிவிப்பாளர்கள் (முஅத்தின்கள்) காணப்படுவார்கள்."** (அறிவிப்பவர்: ஈஸா பின் தல்ஹா பின் உபைதில்லாஹ் (ரஹ்), நூல்: ஸஹீஹ் முஸ்லிம்-631) என அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறிய செய்தி முஅத்தின்கள் அல்லாஹ்விடம் மிக கண்ணியமானவர்கள் என்பதை எமக்கு தெளிவாக்குகின்றது.

'நீண்ட கழுத்துடையோர்' எனும் வாசகம் அரபியர் களிடையே 'கண்ணியமானவர்களுக்கு' பயன்படுத்தப்படும் இலக்கிய வாசகமாகும். அல்லாஹ்வின் பார்வையில் கண்ணியமானவர்களாகத் திகழும் அழைப்பாளர்கள் (முஅத்தின்கள்) இன்று மனிதர்களின் பார்வையில் அற்பமானவர்களாகத் திகழுவதுதான் துயரிலும் பெரும் துயரான செய்தி. மிகக் குறைந்த ஊதியத்தில் மிக வறுமை நிலையிலுள்ளவர்கள் மாத்திரம் பொறுப்பேற்றுச் செய்யப்படும் கடமையாக அதான் சொல்லும் பணி இன்று மாறியிருப்பதானது முஸ்லிம் சமூகத்தின் முதலாவது பலவீனம் என்பதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும். இன்று அதிகமான பள்ளிகளில் வயது முதிர்ந்தவர்களும் தொழில் செய்ய இயலாதவர்களுமே முஅத்தின்களாகக் கடமை புரிந்து வருகின்றனர். இளைஞர்களோ, நல்ல செல்வாக்குள்ளவர்களோ இப்பணிக்கு வராமைக்குக் காரணம் முஅத்தின்களுக்கு வழங்கப்படும் மிகக் குறைந்த ஊதியமே!

பள்ளி நிருவாகிகளின் குடும்பங்களுக்கு ஒரு வாரத்திற்குக் கூடப் போதுமாகாத சம்பளத்தைத்தான் கடமை புரியும் முஅத்தின்களுக்கு மாதச் சம்பளமாகக் கொடுக்கின்றனர். இதனால் மிகப் பயங்கர வறுமையில் முஅத்தின்களின் குடும்பங்கள் வாடும் அவலத்தை நிதர்சனமாகக் கண்டுவருகின்றோம். இந்நிலையை யாரிடம் அவர்கள் முறையிடுவது? எமது நாட்டில் ஒட்டு மொத்த பள்ளிகளின் நிலமையே இதுவாகத்தான் இருக்கின்றது. பிச்சையைப் போன்று வழங்கப்படும் அப்பணத்தால் தன்னிறைவு காணமுடியாத முஅத்தின்கள் கத்தம், பாத்திஹா, மௌலூது போன்ற மார்க்க அனுமதியற்ற வழிகேடுகளைச் செய்து வருமானத்தைப் பெருக்கிக் கொள்கின்றனர். இவ்வாறான தவறுகளை முஅத்தின்கள் மேற்கொள்வதற்கு மூல காரணம் யார்? பாங்கு சொல்பவர் என்றாலும் எம்மைப் போன்ற தேவைகள் உள்ள மனிதன் தான் அவருக்கும் மனைவி, மக்கள் உண்டு எனும் உணர்வு எமது பள்ளி நிருவாகிகளில் அதிகமானவர்களுக்கில்லை என்பதே உண்மையாகும். அல்லாஹ்வே கண்ணியப்படுத்தும் இம்மனிதர்களை நாம் ஏன் கௌரவிக்கக் கூடாது?

வருடத்திற்குப் பல முறை வர்ணங்களால் எத்தனையோ பள்ளிகள் வீண் விரயமாகவும் நிருவாகப் போட்டிக்காகவும் அலங்கரிக்கப்படுகின்ற அதே வேளை அப்பள்ளியில் பல வருடங்களாகப் பணிபுரியும் முஅத்தின் மாத்திரம் எவ்வித முன்னேற்றமுமின்றி வாழ்வில் தேய்ந்த நிலையில் காணப்படுகின்றார். அவரை அழைத்து அவரின் பிரச்சனைகளைக் கேட்டு அவற்றுக்கு எவ்விதத் தீர்வும் கொடுக்கப்படுவதில்லை. 'இவ்வருடமாவது எனக்கு கொஞ்சம் சம்பளத்தைக் கூட்டுங்கள்' என முஅத்தின் தன்னிலையை எடுத்துச் சொன்னால் அவரை நோக்கி 'இஷ்டமென்றால் இருக்கலாம் இல்லாவிட்டால் வீட்டிற்குப் போகலாம்' என நச்சரிக்கும் வாசகங்களை அள்ளி வீசும் பள்ளி நிருவாகங்களைத் தான் இன்று காணமுடிகின்றது.

எமது சமூகத்தில் புற்று நோயாக வேரூன்றியிருக்கும் சீதனக் கொடுமையால் பலர் பாதிக்கப்பட்டாலும் மிக அதிகமான பாதிப்புக்கு ஏழைகளான இம்முஅத்தின்களும் இலக்காகு கின்றனர். ஆறு பெண் பிள்ளைகளைப் பெற்ற ஒரு முஅத்தினின் நிலையை சற்று சிந்தித்துப் பார்த்தால் இதைப் புரிந்து கொள்ளலாம். குறைவான சம்பளம்தான் கொடுக்கப்பட்டாலும் கண்ணிய மாகவாவது முஅத்தின்கள் இன்று நடாத்தப்படுகின் றார்களா? என நாம் நோக்கினால் அடிமைகளைப் போன்று நிருவாகிகளின் வீட்டு வேலைகள் கூடச் செய்யப் பணிக்கப்படுவதைக் காணுகின்றோம். இஸ்லாமிய மார்க்க அறிவில்லாத மனிதர்கள் பள்ளி நிருவாகங்களைப் பொறுப்பேற்று நிர்வகிக்கும் துரதிஷ்டத்தினாலேயே இச்சீர்கேடு எம் சமூகத்தில் நிலவுகின்றது. **"தகுதியற்றவர்களிடம் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டால் மறுமை நாளை நீர் எதிர்பார்த்துக் கொள் என அழ்ழாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்."** (அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரழி), நூல்: ஸஹீஹுல் புஹாரி-59) முஸ்லிம்களின் அடிப்படைக் கடமையான தொழுகையின் அழைப்பை மேற்கொள்பவரை கௌரவிக்காவிட்டால் வேறு யாரை நாம் கௌரவிப்பது? நபிகளாரின் காலத்தில் வாழ்ந்த உம்மி மஃதூம், பிலால் (ரழி) போன்ற முஅத்தின்கள் எப்படி சீராகவும், சிறப்பாகவும் வாழ்ந்தார்கள் என்பதை வரலாற்றைப் படிக்கும் போது புரிந்து கொள்ளலாம். பள்ளியை நிர்வகிப்பவர்கள் கட்டளையிடும் தளபதிகளாகவும், கடமை புரியும் முஅத்தின்கள் செவியேற்கும் கொத்தடிமைகளாகவும் அழ்ழாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களின் காலத்தில் இருக்கவில்லை. இன்னும் சொல்வதென்றால் கருப்பின மனிதராகவும் அடிமைத் தளையிலிருந்து விடுதலை பெற்றவராகவும் திகழ்ந்த பிலாலைத்தான் அழ்ழாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் அகில உலகின் முதல் முஅத்தினாக நியமித்தார்கள். இன்று வரை பிலாலை அனைத்துலகமும் நினைவு கூறுமளவிற்கு தூதர் (ஸல்) மூலமாக அவரை அழ்ழாஹ் கண்ணியப் படுத்தினான்.

## அன்பார்ந்த சகோதரர்களே! பள்ளி நிருவாகிகளே! சமூகப் பொறுப்புதாரிகளே!

அழ்ழாஹ்வின் பணியை மேற்கொள்ளும் இம்மனிதர்களை உதாசீனம் செய்யாமல் நல்ல அந்தஸ்துக்களை அவர்களுக்கு வழங்குவோம்! எம்மை மேம்படுத்த நாம் சிந்திப்பதைப் போன்று அழ்ழாஹ்வின் கடமையைச் செய்ய தன்னையே அர்ப்பணித்திருக்கும் இந்த ஏழைகளைப் பற்றியும் சிந்திப்போம்! வல்ல நாயன் மக்கள் அனைவரும் நிர்வாணமாக நிற்கும் அந்த மறுமை நாளில் எம்மை கண்ணியப்படுத்துவான் என்பதை நினைவில் நிறுத்துவோமாக!

அகீதா

# நல்லடியார்களின் பொருட்டால் நாம் பிரார்த்திக்கலாமா?

மௌலவி M.C.M. ஸஹ்றான் (மஸ்ஊதி)
zahran8686@yahoo.com

**"பூமியில் சீர்திருத்தம் செய்யப்பட்டபின் அதில் குழப்பம் விளைவிக்காதீர்கள்! அச்சத்துடனும், நம்பிக்கையுடனும் அவனிடம் பிரார்த்தனை செய்யுங்கள்! அல்லாஹ்வின் அருள் நன்மை செய்வோருக்கு அருகில் உள்ளது."** (அல்குர் ஆன் 7:56)

இஸ்லாத்தில் பிரார்த்தனை புரிவது ஓர் வணக்கமாகும். இதனை அருள்மறையில் **"என்னை அழையுங்கள்! உங்களுக்கு பதிலளிக்கின்றேன். எனது வணக்கத்தை விட்டும் பெருமையடிப்போர் நரகத்தில் இழிந்தோராக நுழைவார்கள் என்று உங்கள் இறைவன் கூறுகின்றான்."** (அல்குர்ஆன் 40:60) எனக் கூறப்பட்டுள்ளது. பிரார்த்தனை புரிவதை வணக்கமாகக் கூறும் திருமறைக் குர்ஆன் அதனை அல்லாஹ்விடம் மாத்திரமே மேற்கொள்ளுமாறு எமக்கு அறிவுறுத்துகின்றது. **"நான் எனது இறைவனையே பிரார்த்திக்கின்றேன். அவனுக்கு யாரையும் இணையாக்கமாட்டேன் என (முஹம்மதே) கூறுவீராக!"** (அல்குர்ஆன் 72:20) என அல்லாஹ் கூறுகின்றான். எமது தேவைகளை அல்லாஹ்விடம் கேட்கும்பொழுது நாம் நேரடியாகவே கேட்க வேண்டும். இடைத்தரகர்களை ஏற்படுத்திக் கொண்டு அல்லாஹ்விடம் பிரார்த்திப்பதை இஸ்லாம் அனுமதிக்கவில்லை. அல்லாஹ் அருள்மறையில் **"என்னைப் பற்றி எனது அடியார்கள் உம்மிடம் கேட்டால் நான் அருகில் இருக்கிறேன். பிரார்த்திப்பவன் என்னைப் பிரார்த்திக்கும் போது பிரார்த்தனைக்குப் பதிலளிக்கின்றேன். எனவே என்னிடமே பிரார்த்தனை செய்யட்டும்! என்னையே நம்பட்டும்!"** (அல்குர்ஆன் 2:186) எனக் கூறுகின்றான். இவ்வசனங்கள், எமது தேவைகளை அல்லாஹ்விடம் முன்வைப்பதற்கு யாரையும் (வஸீலா) பொருட்டாக நாம் ஆக்க வேண்டியதில்லை, மாறாக நேரடியாகவே அல்லாஹ்விடம் கேட்கலாம் என்பதை தெளிவாக விளக்குகின்றன.

தூய இஸ்லாமிய அறிவின்மையால் இன்று எமது சமூகத்தில் எத்தனையோ சகோதர, சகோதரிகள் தமது பிரார்த்தனைகளில் "யாஅல்லாஹ்! முஹ்யித்தீன் அப்துல் காதர் ஜீலானியின் பொருட்டால் அல்லது இன்ன பெரியார்கள், நாதாக்கள், அவ்லியாக்களின் பொருட்டால் எனது தேவைகளை நிறைவேற்றி வைப்பாயாக!" எனப் பிரார்த்திப்பதைக் காணுகின்றோம். இவ்வாறு பிரார்த்திப்பது அல்லாஹ்வின் வல்லமையில் குறை காண்பதும், இறைவன் கண்டிக்கும் ஷிர்க்கெனும் கொடிய, மன்னிப்பே இல்லாத குற்றமுமாகும். **"இணை கற்பிப்போருக்கு சொர்க்கத்தை அல்லாஹ் விலக்கப்பட்டதாக ஆக்கிவிட்டான்."** (அல்குர்ஆன் 5:72) அல்லாஹ்வுக்கு நேரடியாக பிரார்த்தனைகளை செவிமடுக்கும் ஆற்றல் இல்லை என்பதை இவ்வாறு பிரார்த்திப்பவர்கள் மறைமுகமாகச் சொல்லுகின்றார்கள். அல்லாஹ்வோ திருமறைக் குர்ஆனில் சுமார் நாற்பத்தைந்திற்கும் மேற்பட்ட இடங்களில் தான் 'துல்லியமாக செவிமடுக்கும் ஆற்றலுள்ளவன்' என தன்னைப் பற்றி அறிமுகம் செய்கின்றான். 'பகுத்தறிவு ரீதியாக சிந்தித்துப்

பார்த்தாலும், நல்லடியார்களின் பொருட்டால் அல்லாஹ்விடம் பிரார்த்திப்பது முழுக்க முழுக்க அறியாமை என்பதைப் புரிந்து கொள்ளலாம். ‘அலீம்’ எனும் தொழிலாளி தனது முதலாளியிடம் சென்று, நற்பண்புகளுடன் வாழும் எனது சக தொழிலாளி ‘சலீம்’ பொருட்டால் எனது சம்பளத்தை கூட்டித்தாருங்கள்! எனக் கேட்டால் முதலாளி என்ன பதிலளிப்பார்? சலீம் நல்லவராக இருப்பதால் உனக்கு எப்படி சம்பளத்தைக் கூட்டித் தர முடியும்? என அவர் திருப்பிக் கேட்கமாட்டாரா? இவ்வாறு தான் ‘நற்பண்புகளுடன் வாழ்ந்த முஹ்யித்தீன் அப்துல் காதர் ஜீலானி அவர்கள் பொருட்டால் என்னை ஏற்றுக் கொள்’ என நாம் அல்லாஹ்விடம் பிரார்த்திப்பதும் எவ்வளவு பெரிய முட்டாள்தனம் என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் தனக்கு முன்னால் வாழ்ந்த இப்றாஹீம் (அலை), ஈஸா (அலை) போன்ற நல்லடியார்களின் பொருட்டால் துஆச் செய்ததாகவோ, தமது தோழர்களை அவ்வாறு பிரார்த்திக்குமாறு பணித்ததாகவோ எவ்விதச் சான்றும் கிடையாது. மரணித்துப் போன மகான்களை இடைத்தரகர்களாக ஆக்கி துஆச் செய்யும் பிழையான நடைமுறையை உருவாக்கியவர்களும், இன்று வரை அதை ஊக்குவிப்பவர்களும் உலமாக்கள் என தங்களை கூறிக்கொள்பவர்கள்தான் என்பதை அனைவரும் அறிந்து கொள்ள வேண்டும். அல்லாஹ்வும் அவனது தூதரும் அனுமதிக்காத இப்புதிய நடைமுறையை யார் உருவாக்கினாலும் அது மார்க்கமாக அல்லாஹ்விடம் அங்கீகரிக்கப்படமாட்டாது. அல்லாஹ் திருமறையில் “**அல்லாஹ் அனுமதியளிக்காததை மார்க்கமாக ஆக்கும் தெய்வங்கள் அவர்களுக்கு உள்ளனரா?**” (அல்குர்ஆன் 42:21) எனக் கேட்கின்றான். அல்லாஹ் அல்குர்ஆனில் “**அல்லாஹ்வுக்கு அழகிய பெயர்கள் உள்ளன. அவற்றின் மூலமே அவனிடம் பிரார்த்தியுங்கள்!**” (அல்குர்ஆன் 7:180) எனக் கூறுகின்றான்.

மேற்குறித்த இறைவசனத்திலிருந்து அல்லாஹ்வின் பெயர்களின் பொருட்டால் நாம் பிரார்த்திக்க முடியும் எனும் சட்டத்தைத் தெரிந்து கொள்ள முடிகின்றது. அதே போன்று முற்காலத்தில் குகையில் சிக்குண்ட மூன்று மனிதர்கள் தமது நல்லமல்களின் பொருட்டால் பிரார்த்தித்து குகையிலிருந்து மீண்டனர் (பார்க்க: புஹாரி-5293) எனும் நபிகளாரின் ஆதாரபூர்வமான ஹதீஸும், நல்லமல்களின் பொருட்டால் நாம் பிரார்த்திக்க முடியும் என்பதை எமக்கு சொல்லித்தருகின்றது. இதைத் தவிர ‘அவ்லியாக்களின் பொருட்டால் என்னை மன்னித்து விடு இறைவா!’ எனப் பிரார்த்தித்தால் எமது ஈமான் அற்றுப் போகும் அபாயம் அவ்வார்த்தையில் அடங்கியுள்ளது என்பது அனைவரும் அறிந்து கொள்ள வேண்டிய அடிப்படையாகும்.

மாற்று மதங்களில் பெரிய கடவுளை அணுக, சிறிய கடவுள்களின் உதவி, ஒத்தாசைகளை வேண்டி காத்து நிற்பதைப் போன்று இன்றைய மார்க்க அறிவில்லாத முஸ்லிம்கள் சமாதிகளில் அடங்கப்பட்டிருக்கும் மனிதர்களிடம் மண்டியிட்டுக் கிடக்கும் அசிங்கத்தை காணமுடிகின்றது. ஒரு ஈயைக் கூட படைக்க முடியாத எம்மைப் போன்ற பலவீனங்கள் நிறைந்த மனிதர்களை மகான்கள் என நாமே பெயர் சூட்டிக் கொண்டு பிரார்த்தனை எனும் வணக்கத்தை அவர்களுக்கு செலுத்துவது தெளிவான இறை நிராகரிப்பாகும். எமது தேவைகளை அறியும் அந்த வல்ல நாயனிடம் நேரடியாக முறைப்படாமல் பெரியார்களையும் அவ்லியாக்களையும் இடைத்தரகர்களாக நாம் ஏன் ஆக்கவேண்டும்?

காரிருளுக்குள் அகப்பட்டுக் கிடக்கும் பாறாங்கற்களுக்கு அடியில், ஊர்ந்து செல்லும் எறும்பைக் கூட அறியும் அந்த மகத்தான அதிபதி அல்லாஹ் எமது தேவைகளை மாத்திரம் நேரடியாக அறிந்து கொள்ள மாட்டானா? இடைத்தரகர்கள் அன்றி எமது கோரிக்கை களை செவிமடுக்க அவன் சக்தியற்றவனா? அந்த ரப்புல் ஆலமீனைப் பற்றிய நம்பிக்கையும், அறிவும் சரிவரக் கிடைக்காத முஸ்லிம்களே நல்லடியார்கள் பொருட்டால் பிரார்த்தித்து ‘ஷிர்க்’ எனும் கொடிய குற்றத்தினை சுமந்து கொள்கின்றனர். அல்லாஹ்வுக்கு இணை கற்பிக்காமல் ஓரிறைக் கொள்கையிலேயே வாழ்ந்து ஷிர்க்கின் சாயல் கூட படாமல் மரணிக்கும் தௌஹீத்வாதிகளுக்கு மாத்திரமே சுவனம் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

நல்லடியார்களின் பொருட்டால் பிரார்த்திப்பது நன்மையான காரியமாக இருந்திருந்தால் முதலில் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் அதை எமக்குச் சொல்லித் தந்திருப்பார்கள். அல்லாஹ்வின் தூதருக்கு அல்லாஹ்தான் இறை செய்திகளை அறிவித்துக் கொடுத்தான். அல்லாஹ் அறிவித்துக் கொடுக்காத எந்த ஒன்றையும் நபிகளார் (ஸல்) அவர்கள் எமக்கு மார்க்கமாகச் சொல்லமாட்டார்கள். **"(முஹம்மத்) மனோ இச்சைப்படி பேசுவதில்லை. அ(வர் பேசுவது) அறிவிக்கப்படும் செய்தியைத் தவிர வேறில்லை."** (அல்குர்ஆன் 53:3,4). அல்லாஹ்வும் அவனது தூதரும் நல்லடியார்களின் பொருட்டால் பிரார்த்திப்பதை அனுமதிக்காத போது சாதாரண மனிதர்களாகிய நாம் எப்படி இக்காரியத்தை நன்மை என உறுதிப்படுத்த முடியும்? **"(நபியே!) உமது இறைவன் மறப்பவனாக இல்லை."** (அல்குர்ஆன் 19:64).

இஸ்லாத்தின் தூய மூலாதாரங்களான அல்குர்ஆன் மற்றும் ஆதாரபூர்வமான ஹதீஸ்களை அறியாததன் விளைவாகவே நல்லடியார்கள், அவ்லியாக்களின் பொருட்டால் கோரிக்கைகளை அல்லாஹ்விடம் முன்வைக்கும் வழிகேடு எமது சமூகத்தில் தோன்றியது என்பதே உண்மையாகும். **"அவனே உங்களின் உண்மை இறைவனாகிய அல்லாஹ். உண்மைக்குப் பின்னே வழிகேட்டைத் தவிர வேறு என்ன உள்ளது? எவ்வாறு திசை திருப்பப்படுகிறீர்கள்?"** (அல்குர்ஆன் 10:32) அவனிடம் எமது கோரிக்கைகளை முன்வைப்பதற்கு எவரையும் இடைத்தரகர்களாக ஆக்கவேண்டிய தேவையில்லை. அவன் பிறர் மூலம் எமது தேவைகளை அறியும் அளவிற்கு பலவீனனும் அல்ல. நேரடியாகவே துஆச் செய்வோம். எந்நேரமும் எம்மீது அருளைச் சொரியும் அந்த ரப்புல் ஆலமீன் எமது துஆக்களை நிச்சயம் அங்கீகரிப்பான் எனும் ஆழ்ந்த ஈமானிய உறுதியை எமது நெஞ்சங்களில் பதிப்போமாக!

எனவே அன்பார்ந்த சகோதர, சகோதரிகளே! நமது தேவைகளை, கஷ்டங்களை, கோரிக்கைகளை செவியேற்பதற்கும் அவற்றை நீக்குவதற்கும் தகுதியானவன் மிகப்பெரும் கருணையாளனான அல்லாஹ் மாத்திரமே!

அல்குர்ஆன்

# ஷீஆக்களின் வலையில் சிக்கிய முஸ்லிம் சமூகம்

அல் ஹாபிழ் அபூ அஸ்பாக் அல் அதரி
abooashfaqalathary@gmail.com

"என் இறைவா! எனது சமுதாயத்தினர் இந்தக் குர்ஆனைப் புறக்கணிக்கப்பட்டதாக ஆக்கி விட்டனர் என்று இத்தூதர் கூறுவார்." (அல்குர்ஆன் 25:30)

**சென்ற இதழின் தொடர்ச்சி...**

## த:வீல் என்றால் என்ன?

இச்சொல் மொழி ரீதியாக மீண்டு வருதல் இறுதி முடிவு சென்றடையும் இடம் போன்ற கருத்துக்களை தாங்கி நிற்கின்றது. கலை பிரயோகத்தில் இச்சொல்லுக்கு மூன்று விதமான அர்த்தங்கள் உள்ளன. அவற்றில் இரண்டு மாத்திரமே சரியானதும் ஏற்றுக்கொள்ளப்பட்டதுமாகும். மற்றையது (3வது) வழிகேடர்களிடம் காணப்பட்ட தவறான வழிந்துரையாகும்.

## 1. த:வீல் - விளக்கவுரை

3ம் அத்தியாயத்தின் ஏழாம் வசனத்தில் காணப்படும் உண்மைக் கருத்தை (விளக்கவுரையை) அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் அறியமாட்டார்கள். எனும் வசனத் தொடரில் வரும் 'த:வீல்' என்ற சொல்லிற்கு விளக்கம் என்பதே அர்த்தமாகும். அதுமட்டுமல்லாமல் பெரும்பாலான தப்ஸீர்கலை அறிஞர்கள் இக்கருத்திலேயே இதனைப் பிரயோகித்துள்ளதோடு தப்ஸீர் கிரந்தங்களில் மிகப்பிரபல்யம் வாய்ந்ததாகத் திகழும் இமாம் இப்னு ஜரீர் அத்தபரி அவர்களின் தப்ஸீர் கிரந்தம் "ஜாமிஉல் பயான் பீ த:வீலி ஆயில் குர்ஆன்" (குர்ஆன் வசனங்களுக்கு விளக்கம் கூறல்) எனும் பெயரிலேயே பிரசித்தி பெற்றிருப்பதானது இக்கருத்தை மேலும் வலுவூட்டுகின்றது.

## 2. த:வீல் - முடிவு

இதுவும் த:வீல் என்ற சொல்லிற்கு திருமறைக் குர்ஆனில் பிரயோகிக்கப்படும் அடிப்படைக் கருத்தாகும். 17:53, 17:35 போன்ற இடங்களில் பயன்படுத்தப்படும் 'த:வீல்' எனும் வார்த்தைக்கு முடிவு என்றே பொருள் கொள்ள வேண்டும்.

## 3. த:வீல் (ஒரு சொல்லை அதன் வெளிப்படைக் கருத்தை விட்டும் மாற்றுதல்)

இதுதான் தஃவீலுக்குக் கொடுக்கும் மூன்றாவது அர்த்தமாகும். எனினும் இக்கருத்து எந்த ஒரு ஸஹாபியிடமோ, ஹதீஸ்கலை அறிஞர்களிடமோ காணப்பட்டது கிடையாது. பிற்பட்ட காலப்பகுதியில் வந்த 'இல்முல்கலாம்' எனப்படும் வேத சாஸ்திரங்களைப்படித்த மேதாவிகள்(?)தான் புதிதாக இக்கருத்தை ஏற்படுத்திக் கொண்டனர். 'இல்முல்கலாம்' என்பது இஸ்லாமியக் கொள்கையிலிருந்து நெறிபிறழ்ந்த அஷ்அரிய்யாக்கள் எனும் வழிகேடர்களிடம் வேரூன்றிக் காணப்படுகின்ற ஒரு கொள்கையாகும். இது ஒரு மோசமான சித்தாந்தமாகும். ஆனால் துரதிஷ்ட வசமாக எமது இலங்கை நாட்டில் (மத்ஹபுகள் சார்ந்த) பெரும்பாலான அரபு மத்ரஸாக்களில் அகீதாப்பாடங்கள் இச்சாராரின் நூற்களிலிருந்தே போதிக்கப்படுகின்றன. அவற்றில் 'இல்முல்கலாம்' என்ற வேத சாஸ்திரங்களே நிறைந்து காணப்படுகின்றன. இதில் வேடிக்கை என்னவென்றால் நமது சமூகத்திலுள்ள உலமாக்கள் எந்த மத்ஹபு அறிஞர்களை தாங்கள் பின்பற்றுவதாக கூறுகின்றார்களோ, அந்த மத்ஹபு அறிஞர்கள்தான் இல்முல்கலாமைப் படிப்பது ஹராம் என்பதாக பத்வாவும் வழங்குகின்றார்கள். இதற்குச் சான்றாக ஒரு சில அறிஞர்களின் கூற்றுக்களை மாத்திரம் இங்கு சுட்டிக்காட்டுகிறோம். (மாற்றுக் கருத்துடையவர்கள் புரிந்துகொள்வதற்காகவே இங்கு இமாம்களின் கருத்துக்களை சுட்டிக்காட்டுகின்றோம்)

*இமாம் அபூ ஹனீபா (ரஹ்) (ஹிஜ்ரி 80-150): "அம்ருப்னு உபைதுக்கு அல்லாஹ்வின் சாபம் உண்டாகட்டும். ஏனெனில் அவன்தான் மக்களுக்கு இல்முல்கலாமை கற்பதற்கு வழியமைத்துக்கொடுத்தவன்"

*இமாம் அபூ யூசுப் (ரஹ்) (அபூ ஹனீபாவின் பிரதான மாணவர்) (ஹிஜ்ரி 113-182): "இல்முல்கலாமை அறிந்திருப்பது அறியாமையாகும். அதனை அறியாமல் இருப்பது புத்திசாலித்தனமாகும். மேலும் எவன் "இல்முல்கலாமை தேடுகிறானோ, அவன் இஸ்லாத்தை விட்டும் வெளியேறியவனாவான்.

*இமாம் ஷாபி (ரஹ்) (ஹிஜ்ரி 150-204): "ஷிர்கை தவிர்த்து அல்லாஹ்வினால் தடுக்கப்பட்ட அனைத்துப் பாவங்களையும் விட இல்முல் கலாம் சார்ந்த விடயங்களை படிப்பதுதான் மிகப்பெரிய பாவமாகும். மேலும் இல்முல்கலாமை கற்ற மேதாவிகள் விடயத்தில் எனது தீர்ப்பானது அவர்கள் அனைவரும் கால்பாதணிகளாலும், நார்களாலும் துன்புறுத்தப்பட்டு கோத்திரங்களுக்கு மத்தியில் வீதிகளில் வலம் கொண்டுவரப்பட்டு அவ்விடத்தில் 'இதுதான் குர்ஆன்' சுன்னாவை விட்டுவிட்டு வேத சாஸ்திரங்களை (இல்முல்கலாமை) எடுத்துக்கொண்ட வனுக்குரிய கூலி என சொல்லப்படவேண்டும்."

*இமாம் அஹ்மத் பின் ஹம்பல்(ரஹ்) (இமாம் ஷாபியின் மாணவர்) (ஹிஜ்ரி 164-241): "வேத சாஸ்திரங்களை கற்பவன் ஒரு காலமும் வெற்றி பெறவே முடியாது. இதனை எடுத்துக்கொண்ட அனைவரும் ஸிந்தீக்குகள் (இறை நிரகாரிப்பாளனாக இருந்து கொண்டு இறை விசுவாசியை போன்று வாழ்பவர்)கள் ஆவார்கள். இது தவிர, அபூ ஹாமித் அல் கஸ்ஸாலி (ஷாபி மத்ஹபு வாதிகளால் 'ஹுஜ்ஜதுல் இஸ்லாம்' (இஸ்லாத்தின் ஆதாரம்) என மதிக்கப்படுபவர்) என்ற ஸூபித்துவவாதி 'இல்ஜாமுல் அவாம் அன் இல்மில் கலாம்' (இல்முல்கலாமைப் படிப்பதை விட்டும் பொதுமக்களைத் தடுத்தல்) என்ற ஒரு தனியான நூலையே இதற்காக எழுதியுள்ளார்கள். இப்படி ஏராளமான சான்றுகள் இருக்கின்றன. மேற்குறிப்பிட்ட அறிஞர்கள் யாவரும் மத்ஹபுவாதிகளால் மதிக்கப்படும் அறிஞர்களே. ஏன் இவற்றை முக்கியத்துவப்படுத்தி இங்கு எழுதுகின்றோ மெனில் சகல அறிஞர்களாலும் புறக்கணிக்கப்பட்ட இந்த வழிகேடான 'இல்முல்கலாம்' எனும் சிந்தனை நமது அறபு மத்ரஸா பாடத்திட்டங்களில் முக்கிய இடத்தை வகிக்கின்றது.

மத்ஹபுகளுக்கு சொந்தமென இவர்களால் அழைக்கப்படும் இமாம்களே இக் கருத்துக்களை கற்பவர்களை 'ஸிந்தீக்குகள்' (இறை நிரகாரிப்பாளனாக இருந்து கொண்டு இறை விசுவாசியை போன்று வாழ்பவர்) எனக்குறிப்பிடும் போது அவர்களைப் பின்பற்றுவதாக

மார்தட்டும் பொய் நேசர்கள் அவர்களை ‘அகீதாவுடைய அறிஞர்கள்’ என்று மாணவர்களுக்கு படிப்பித்துக் கொடுக்கின்றனர். அகீதாப் பிரச்சனைகளுக்கு முன்னுரிமை வழங்குவோம் என வீரமுழக்கம் போடும் காத்தான்குடி உலமா சபை ஏன் இதுவரை இந்த விடயத்தில் கரிசனை காட்டவில்லை? இஜ்திஹாத் சார்ந்த பிரச்சனைகளுக்கு போர்கொடி தூக்கும் பல்கலைக்கழக பட்டதாரிகள் அகீதாவிற்கு வேட்டு வைக்கும் இப்பாரிய கொடுமையை கண்டுகொள்ளாமல் இருப்பதானது எமக்கெல்லாம் புரியாத புதிராகவே இருந்து வருகின்றது. நேர்வழி காட்ட அல்லாஹ் போதுமானவன்.

**இன்ஷா அல்லாஹ் வளரும்...**

**அஸ்ஸுன்னா**

# நபிகளாரின் செயற்பாடுகளைப் புரிந்து கொள்வது எப்படி?

**அபூ அஹ்மத் அல் அதரி**
abooahamed@gmail.com

**“என்னை எவ்வாறு தொழக் கண்டீர்களோ அவ்வாறே தொழுங்கள்.”** (அறிவிப்பவர்: மாலிக் பின் அல்ஹுவைரிஸ் (ரழி), நூல்: ஸஹீஹுல் புஹாரி-631)

**சென்ற இதழின் தொடர்ச்சி...**

கடந்த இதழ்களில் ஸுன்னாவின் பிரதானமான மூன்று வகைகளையும் நோக்கினோம். சொல் ரீதியான, செயற்பாட்டு ரீதியான மற்றும் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் அங்கீகரித்த அம்சங்களான நபிமொழிகள் ஆகியவற்றைப் பார்த்தோம்.

அந்த வகையில் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களது செயற்பாடுகளைப் புரிந்துகொள்வது தொடர்பில் சில அடிப்படை அம்சங்களை விளங்கிக் கொள்வது அவசியமாகும். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களது செயற்பாடுகள், வணக்க வழிபாடுகள் பற்றிய சரியான தெளிவின்மையின் காரணமாகவே அதிகளவிலான வழிகெட்ட சிந்தனைகள் சமூகத்தில் தோற்றம் பெறுகின்றன. அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் நபித்துவத்திற்கு முன்பு குகையில் தனித்திருந்தார்கள் என்று கூறித்தான் ஒரு சமூகம் ‘தொழுகை தேவையில்லை, திக்ரே போதும்’ என்று கூறி வருகின்றது.

மற்றும் சிலர் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களது செயற்பாடுகள் தொடர்பில் சரியான விளக்கமின்மையின் காரணமாக கேள்விப்பட்டதையெல்லாம் ஸுன்னா என்றும், அவர்களது அறியாமையை ஏற்றுக் கொள்ளாத போது தௌஹீத்வாதிகளை நோக்கி யூத, நஸாராக்களின் கலாசாரங்களைப் பின்பற்றுவோர் எனவும் கூறிவருகின்றனர். இவ்வாறு கூறுகின்ற சகோதரர்கள் தமது வணக்கவழிபாடுகளில் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் காட்டித் தந்த பல ஸுன்னாக்களை தமது இபாதத்துக்களில் கடைப்பிடிப்பதுடன் பல்வேறு பித்அத்களையும் செய்து வருகின்றனர். எனவே, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களது செயற்பாடுகளில் எது மார்க்கம் என்ற வகையில் பின்பற்ற வேண்டியது, எது மனிதன் என்ற வகையில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டியது என்பதை இன்ஷா அல்லாஹ் தொடர்ந்து நோக்குவோம்.

அல்லாஹ் திருமறைக் குர்ஆனில், **“நான் உங்களைப் போன்ற மனிதன் தான். (எனினும்) உங்கள் கடவுள் ஒரே ஒரு கடவுளே என எனக்கு அறிவிக்கப்படுகிறது.”** (அல்குர்ஆன் 18:110) என்று கூறுமாறு அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுக்கு கட்டளை யிடுகின்றான். இங்கு அல்லாஹ் இரு விடயங்களை ஒன்று சேர்த்துக் கூறுகிறான்.

**01.** நபிகளார் (ஸல்) அவர்கள் ஒரு தூதர் என்ற வகையில் மார்க்க விவகாரங்களில் அவர்கள் சமுதாயத்திற்கு தெளிவு படுத்தும் விடயங்களை ஏற்று நம்ப வேண்டும். இதனை பின்வரும் திருமறை வசனமும் உறுதி செய்கின்றது. **“மக்களுக்கு அருளப்பட்டதை நீர் அவர்களுக்கு**

**விளக்க வேண்டும் என்பதற்காகவும், அவர்கள் சிந்திக்க வேண்டும் என்பதற்காகவும் இந்தப் போதனையை உமக்கு அருளினோம்.**" (அல்குர்ஆன் 16:44)

**02.** நபிகளார் (ஸல்) அவர்கள் ஒரு மனிதர். ஒரு மனிதனுக்கு உலகளாவிய தேவைகள் பல உள்ளன. மனித செயற்பாடுகள் என்பது குடும்பம், மனைவி, தொழில், இல்லற வாழ்க்கை என நிறைந்து காணப்படுகின்றது. அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் புரோகிதத்தையோ, துறவறத்தையோ ஒரு போதும் அங்கீகரிக்கவில்லை. மாறாக, குடும்ப விவகாரங்களை ஒதுக்கி விட்டு மேற்கொள்ளப்படும் வணக்க வழிபாடுகளை அவர்கள் கண்டித்தார்கள்.

**"அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுடைய துணைவியரின் வீடுகளுக்கு மூன்று பேர் கொண்ட குழுவினர் வந்து அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களின் வணக்க வழிபாடுகள் குறித்து வினாத் தொடுத்தனர். அதுபற்றி அவர்களுக்குத் தெரிவிக்கப் பட்டபோது, அவர்கள் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களின் வணக்க வழிபாடுகளைக் குறைத்து மதிப்பிட்டது போல் தெரிந்தது. பிறகு (அவர்களே அதற்குச் சமாதானமும் கூறிக்கொண்டு), முன்பின் தவறுகள் மன்னிக்கப்பட்டு விட்ட அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் எங்கே? நாம் எங்கே? என்று சொல்லிக்கொண்டனர். அவர்களில் ஒருவர் (இனிமேல்) நான் என்ன செய்யப்போகிறேன் என்றால், 'எப்போதும் இரவில் தொழுதுகொண்டே இருக்கப் போகிறேன்' என்றார். இன்னொருவர், 'நான் ஒருநாள் கூட விடாமல் காலமெல்லாம் நோன்பு நோற்கப 'போகிறேன்' என்று கூறினார். மூன்றாம் நபர் 'நான் பெண்களைவிட்டும் ஒதுங்கியிருக்கப்போகிறேன். ஒருபோதும் மணமுடித்துக் கொள்ளமாட்டேன்' என்று கூறினார். அப்போது அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் (அந்தத் தோழர்களிடம்) வந்து இப்படி இப்படியெல்லாம் பேசிக்கொண்டது நீங்கள்தாமே! அறிந்துகொள்ளுங்கள்- அல்லாஹ்வின் மீதாணையாக! உங்களைவிட அதிகமாக நான் அல்லாஹ்வை அஞ்சுபவன் ஆவேன். அல்லாஹ்வைப் பயந்து நடப்பவன் ஆவேன். ஆயினும், நான் நோன்பு நோற்கவும் செய்கிறேன். விட்டுவிடவும் செய்கிறேன். தொழவும் செய்கிறேன். உறங்கவும் செய்கிறேன். மேலும், நான் பெண்களை மணமுடித்தும் உள்ளேன். ஆகவே, என் வழிமுறையை யார் கைவிடுகின்றாரோ அவர் என்னைச் சார்ந்தவர் அல்லர் என்று சொன்னார்கள்.**" (அறிவிப்பவர்: அனஸ் பின் மாலிக் (ரழி), நூல்: ஸஹீஹுல் புஹாரி-5063) ஸஹீஹ் முஸ்லிமின் அறிவிப்பில் (2714) அவர்களில் சிலர் புலால் உண்ணமாட்டேன், படுக்கை விரிப்பில் உறங்கமாட்டேன் என்றும் கூறினார்கள் என இடம் பெற்றுள்ளது. நபிமொழிகளை ஆய்வு செய்யும் போது 'நான் ஒரு மனிதன்' என்று துவங்கும் அதிகமான நபிமொழிகளை காணக் கிடைக்கின்றது. (இன்ஷா அல்லாஹ் அவற்றை அடுத்த இதழில் நோக்குவோம்)

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களின் சொல், செயல் அனைத்தையும் எவ்வித வித்தியாசமுமின்றி ஸுன்னாவாகக் கடைப்பிடிக்க கூடாதென்பதை மதீனத்து விவசாயத்துடன் தொடர்புடைய பின்வரும் நபிமொழி விளக்குகின்றது. **"அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் மதீனாவுக்கு வந்த போது மதீனாவாசிகள் பேரீச்ச மரங்களை ஒட்டுச் சேர்க்கை செய்து கொண்டிருந்தனர். தாங்கள் பேரீச்ச மரங்களை சூல்கொள்ளச் செய்வதாக அவர்கள் கூறினர். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், "நீங்கள் என்ன செய்து கொண்டிருக்கின்றீர்கள்?" என்று கேட்டார்கள். மக்கள் "(வழக்கமாக) இவ்வாறே நாங்கள் செய்து வருகிறோம்" என்று கூறினர். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், "நீங்கள் இவ்வாறு செய்யாவிட்டால் நன்றாயிருந்திருக்கலாம்" என்று சொன்னார்கள். ஆகவே, அவர்கள் அ(வ்வாறு செய்வ)தை விட்டு விட்டனர். அந்த வருடத்தில் கனிகள் 'உதிர்ந்துவிட்டன' அல்லது 'குறைந்துவிட்டன' அதைப் பற்றி மக்கள் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம் தெரிவித்தனர். அப்போது அவர்கள், 'நான் ஒரு மனிதனே; உங்கள் மார்க்க விஷயத்தில் நான் உங்களுக்கு ஏதேனும் கட்டளையிட்டால் அதை நீங்கள் கடைப்பிடியுங்கள். (உலக விவகாரத்தில்) சொந்தக் கருத்தாக உங்களுக்கு ஏதேனும் கட்டளை யிட்டால் நானும் ஒரு மனிதனே' என்று சொன்னார்கள்.**" (அறிவிப்பவர்: ராபிஃஉ பின் கதீஜ் (ரழி), நூல்: ஸஹீஹ் முஸ்லிம்-4712)

மேற்படி நபிமொழியில் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் குறித்த விடயத்தில் என்னை விட நீங்களே அறிந்தவர்கள் என்று கூறியதோடு நானும் ஒரு மனிதர் என்பதை வலியுறுத்துகிறார்கள். தற்போது நம் மத்தியில் இதனையொத்த நிறைய விடயங்களை மக்கள் ஸுன்னா எனக் கருதி செய்து வருகின்றனர். அந்த வகையில் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களது உணவு உண்ணும் முறை மற்றும் இயற்கைச் செயற்பாடுகளான நிற்றல், உட்காருதல், பயணம், ஆடை அணிதல் போன்ற அம்சங்களை ஹதீஸ்களின் நிழலில் தெளிவாகப் புரிந்து கொள்வதன் மூலம் ஜுப்பா, தொப்பி, தலைப்பாகை, சஹன் சாப்பாடு, தலைசீவும் முறை போன்ற பல்வேறுபட்ட விடயங்களில் எதை பின்பற்றினால் நன்மை தரும் என்பதை எதிர்வரும் இதழ்களில் நோக்குவோம்.

**இன்ஷா அல்லாஹ் வளரும்...**

**அஸ்ஸுன்னா**

# நபிவழிக்கு முரணான மத்ஹபுச் சட்டங்கள்

மௌலவி B.M. அஸ்பர் [பலாஹி]
asfarbm@ymail.com

**“நம்பிக்கை கொண்டோரே! நீங்கள் அல்லாஹ்வையும், இறுதி நாளையும் நம்பி இருந்தால் அல்லாஹ்வுக்குக் கட்டுப்படுங்கள்! இத்தூதருக்கும், (முஹம்மதுக்கும்) உங்களில் அதிகாரம் உடையோருக்கும் கட்டுப்படுங்கள்! ஏதேனும் ஒரு விஷயத்தில் நீங்கள் முரண்பட்டால் அதை அல்லாஹ்விடமும், இத்தூதரிடமும் கொண்டு செல்லுங்கள்! இதுவே சிறந்ததும், மிக அழகிய விளக்கமுமாகும்.”** (அல்குர்ஆன் 4:59)

சென்ற இதழில் மத்ஹப்வாதிகள் தமது மத்ஹபுக் கருத்துக்களை நியாயப்படுத்த மத்ஹபுகளின் பெயரால் ஹதீஸ்களை இட்டுக்கட்டி கூறியுள்ளனர் என்ற விளக்கத்தைப் பார்த்தோம். இந்த இதழில் ஹதீஸ்களுக்கு நேர் மாற்றமாக அமைந்துள்ள மத்ஹபுச் சட்டங்கள் சிலவற்றை நோக்குவோம்.

## அன்பார்ந்த இஸ்லாமிய சகோதர, சகோதரிகளே!

இஸ்லாத்தின் அடிப்படை மூலாதாரமாக அல்குர்ஆனும் ஆதாரபூர்வமான ஹதீஸும் அமைந்திருக் கின்றது. இஸ்லாத்தை ஏற்ற ஒவ்வொரு முஸ்லிமும் இவ்விரண்டின் அடிப்படையிலும் தமது வாழ்வின் எல்லா அம்சங்களையும் அமைத்துக்கொள்ள வேண்டும் என இஸ்லாம் எதிர்பார்க்கின்றது. மத்ஹபு நூற்களைப் பொறுத்த மட்டில் அவற்றில் அல்குர்ஆனுக்கு மாற்றமான சட்டங்கள் காணப்படுவது போல் நபிவழிக்கு நேர் முரணான சட்டங்களும் மலிந்து காணப்படுகின்றன. அவற்றில் சிலவற்றை நோக்குவோம்.

01. ஒருவரோ அல்லது பலரோ பள்ளிவாயலுக்கு கூட்டுத்தொழுகைக்காக வந்து இமாமை எந்த நிலையில் கூட்டுத்தொழுகையில் காண்கின்றார்களோ, அவர்கள் அந்த இமாமுடன் சேர்ந்து தொழ வேண்டும். இதுதான் நபிவழியும் இஸ்லாத்தின் சட்டமுமாகும். இதை பின்வரும் ஹதீஸ் கூறுகிறது.

**“(கூட்டுத் தொழுகைக்காக) இகாமத் சொல்வதைச் செவியுற்றால் தொழுகைக்கு நடந்து செல்லுங்கள். அப்போது நிதானத்தையும், கண்ணியத்தையும் கடைப்பிடியுங்கள். அவசரப்பட்டு ஓடிச் செல்லாதீர்கள். (இமாமுடன்) உங்களுக்குக் கிடைத்த (ரக்அத்) தைத் தொழுங்கள், உங்களுக்குத் தவறிப் போனதை (பின்னர்) பூர்த்தி செய்யுங்கள் என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.”** (அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரழி), நூல்: ஸஹீஹுல் புஹாரி-636) ஆனால் இதற்கு நேர் மாற்றமாக ஷாபி மத்ஹபு நூல் பின்வருமாறு கூறுகிறது. “இமாம் கடைசி ரக்அத்தின் ருகூவை முடித்ததன் பின் பள்ளிவாயலுக்கு வரும் கூட்டத்தினர் இமாம் சலாம்

கொடுக்கும் வரை (தொழுகையில்) சேராமல் பொறுமையாக இருந்து அவர் சலாம் கொடுத்த பின்பு தனி ஜமாத்தாக தொழ வேண்டும். இதுதான் ஸுன்னத்தாகும். (இக்கருத்து ஷாபி மத்ஹபின் பத்ஹுல் முயீன் எனும் நூலில் பாகம்-02, பக்கம்-06ல் கூறப்பட்டுள்ளது)
வணக்கமாகக் கருதப்படும் ஓர் அம்சமாகும். ஒருவர் திருக்குர்ஆனை மூன்று நாட்களுக்குக் குறைவாக ஓதி முடிப்பதை இஸ்லாம் தடைசெய்துள்ளது. அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் மூன்று நாட்களுக்குக் குறைவாக ஒரு குர்ஆனை ஓதி முடிப்பதற்குத் தடை விதித்தார்கள். இதை பின்வரும் ஹதீஸ் தெளிவுபடுத்துகிறது.

**“நபி (ஸல்) அவர்கள் என்னிடம், ஒவ்வொரு மாதமும் மூன்று நாட்கள் நோன்பு நோற்பீராக! என்று கூறினார்கள். இதைவிட அதிகமாக எனக்குச் சக்தி உள்ளது! என்று நான் கூறினேன். முடிவில், ஒருநாள் நோன்பு நோற்று ஒரு நாள் விட்டுவிடுவீராக! என்று கூறினார்கள். மேலும் ஒவ்வொரு மாதமும் (ஒரு தடவை) குர்ஆனை (முழுமையாக) ஓதுவீராக! என்றார்கள். இதைவிட அதிகமாக (ஓத) எனக்கு சக்தி உள்ளது! என்று நான் கூறினேன். (நான் கேட்கக் கேட்க) குறைத்துக்கொண்டே வந்து முடிவில் மூன்று நாட்களில் ஒருதடவை குர்ஆனை (முழுமையாக) ஓதுவீராக! என்று கூறினார்கள்.”** (அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் பின் அம்ர் (ரழி), நூல்: ஸஹீஹுல் புஹாரி-1978)

ஆனால் இதற்கு நேர் மாற்றமாக ஷாபி மத்ஹபு நூல் பின்வருமாறு கூறுகிறது. ஒருவர் குர்ஆனை ஒவ்வொரு நாளும் ஒரு தடவை ஓதி முடிக்க வேண்டும். ரமழானில் அறுபது தடவை ஓதி முடிக்க வேண்டும். ஒவ்வொரு தடவையும் தொழுகையிலேயே ஓதி முடிக்க வேண்டும். (இக்கருத்து ஷாபி மத்ஹபின் இஆனதுத் தாலிபீன் எனும் நூலில் பாகம்-01 பக்கம்-16ல் கூறப்பட்டுள்ளது.)

ஒரு நாளைக்கு இருதடவை குர்ஆனை ஓதிமுடிப்பது சாத்தியமா? என்பது ஒருபுறம் இருக்க, இதற்கு மார்க்கத்தில் அனுமதி உள்ளதா? என்பதைக் கூட இவர்கள் சிந்திக்கவில்லை.

03. ஜும்ஆத் தொழுகையின் நேரம் தொடர்பாக இஸ்லாம் பின்வருமாறு கூறுகிறது. ஜும்ஆவுக்கு இரண்டு நேரங்கள் உள்ளன. ஒன்று ழுஹர் நேரம் மற்றது முற்பகல் நேரம் இதுபற்றி பின்வரும் நபிமொழி தெளிவுபடுத்துகிறது.

**“நாங்கள் வெள்ளிக்கிழமை அன்று (மிகவும்) மகிழ்ச்சியாக இருப்போம் என்று சஹ்ல் பின் சஅத் (ரழி) அவர்கள் கூறினார்கள். நான் ஏன் என்று கேட்டேன். அதற்கு அவர்கள் எங்களுக்கு ஒரு மூதாட்டி இருந்தார். அவர் மதீனாவிலுள்ள 'புளாஆ' எனும் பேரிச்சந் தோட்டத்திற்கு ஆளனுப்பி (அங்கு பயிராகும்) தண்டுக் கீரையின் தண்டுகளைக் கொண்டுவரச் செய்து, அதை ஒரு பாத்திரத்தில் இடுவார். அத்துடன் சிறிது வாற்கோதுமையை அரைத்து அதில் இடுவார். நாங்கள் ஜுமுஆத் தொழுதுவிட்டு திரும்பி வந்து அந்த மூதாட்டிக்கு சலாம் சொல்வோம். அப்போது அவர் அந்த உணவை எங்கள் முன் வைப்பார். அதன் காரணத்தினால் நாங்கள் (வெள்ளிக்கிழமை) மகிழ்ச்சியோடு இருப்போம். ஜுமுஆவிற்குப் பிறகுதான் நாங்கள் மதிய ஓய்வு எடுப்போம், காலை உணவையும் உட்கொள்வோம்.”** (அறிவிப்பவர்: அபூஹாஸிம் சலமா பின் தீனார் (ரஹ்), நூல்: ஸஹீஹுல் புஹாரி-6248)

ஆனால் இதற்கு நேர் மாற்றமாக ஷாபி மத்ஹபு நூல் பின்வருமாறு கூறுகிறது. ஜும்ஆத் தொழுகை நிறைவேறுவதற்கு முக்கியமான நிபந்தனைகளில் ஒன்று அது ழுஹர் நேரத்தில் தொழப்பட வேண்டும் என்பது. அதற்கு முன் தொழப்பட்டால் அந்த ஜும்ஆ செல்லத்தக்கதல்ல.

(இக்கருத்து ஷாபி மத்ஹபின் பத்ஹுல் முயீன் எனும் நூலில் பாகம்-02, பக்கம்-62ல் குறிப்பிடப்பட்டுள்ளது.)

04. போதைப் பொருள் பாவனையை இஸ்லாம் மிக வன்மையாகக் கண்டிக்கிறது. குறைவாகப் பாவித்தாலும், கூடுதலாகப் பாவித்தாலும் போதை ஏற்பட்டாலும், ஏற்படாவிட்டாலும் ஹராமேயாகும். போதை தரக்கூடிய ஒவ்வொன்றும் தடை செய்யப்பட்டது (ஹராம்) ஆகும். இதை பின்வரும் ஹதீஸ் கூறுகிறது. **“அல்லாஹ்வின் தூதரே! எங்கள் (பிறந்த இடமான) யமன் நாட்டில் தேனில் 'அல்பித்உ' எனப்படும் ஒரு வகை பானமும் தயாரிக்கப் படுகிறது (அவற்றின்**

**சட்டம் என்ன?) என்று கேட்டேன். அதற்கு அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், போதை தரக்கூடிய ஒவ்வொன்றும் தடை செய்யப்பட்டது. (ஹராம்) ஆகும் என்று பதிலளித்தார்கள்."** (அறிவிப்பவர்: அபூமூசா அல்அஷ்அரி (ரழி) நூல்: ஸஹீஹுல் புஹாரி-6124) ஆனால் இதற்கு நேர் மாற்றமாக ஷாபி மத்ஹபு நூல் பின்வருமாறு கூறுகிறது.

கொஞ்சம் (போதைப் பொருள் சாப்பிடலாம்) என்பதன் கருத்து என்னவெனில் அது அறிவில் எந்த ஒரு பாதிப்பையும் ஏற்படுத்தக்கூடாது. அது போதையூட்டக் கூடியதாக இருப்பினும் சரியே. அதிகம் என்பதன் கருத்து அது அவ்வாறு அறிவில் ஒருவிதமான பாதிப்பை ஏற்படுத்துவதாகும். எனவே, இது மக்ரூஹ் (வெறுக்கத் தக்கது) என்பதுடன் கொஞ்சம் சாப்பிடுவது கூடும். இது ஹராம் ஆகாது. ஆனால், இதைக் கண்டிப்பாகப் பொது மக்களிடம் மறைத்தாக வேண்டும். இல்லையெனில் அவர்கள் கொஞ்சம் என்று எண்ணிக் கொண்டு அதிகம் சாப்பிட்டு விடுவார்கள். (இக்கருத்து ஷாபி மத்ஹபின் இஆனதுத் தாலிபீன் எனும் நூலில் பாகம்-4 பக்கம்-156ல் கூறப்பட்டுள்ளது)

05. இஸ்லாத்தில் அடிப்படை மூலாதாரமான அல்குர்ஆன் முஸ்லிம்களிடத்தில் மகத்துவமிக்க வேதமாகும். அதை ஓதுவதையும் அதன்படி நடப்பதையும் இஸ்லாம் வணக்கமாகக் கருதுகிறது. ஏனெனில் அது இறைவனின் வார்த்தையும் வழிகாட்டலுமாகும். திருக்குர்ஆனில் ஸூரத்துல் பாத்திஹாவுக்கென்று தனிச்சிறப்பு உள்ளது. இதை பின்வரும் ஹதீஸ் கூறுகிறது.

**"நான் (பள்ளிவாசலில்) தொழுதுகொண்டிருந்தபோது என்னை நபி (ஸல்) அவர்கள் அழைத்தார்கள். (தொழுகையில் இருந்தமையால்) நான் அவர்களுக்கு உடனடியாக பதிலளிக்கவில்லை. (தொழுதுமுடித்த பிறகு) அல்லாஹ்வின் தூதரே நான் தொழுதுகொண்டிருந்தேன். (அதனால்தான் உடனடியாக தங்களுக்கு நான் பதிலளிக்க வில்லை) என்று சொன்னேன். நபி (ஸல்) அவர்கள் 'அல்லாஹ்' (இறை நம்பிக்கையாளர்களே) அல்லாஹ்வும் (அவனுடைய தூதரும் உங்களை அழைக்கும்போது அவர்களுக்கு பதிலளியுங்கள் என்று 8:24ஆவது வசனத்தில்) சொல்லவில்லையா? என்று கேட்டார்கள். பிறகு நீங்கள் பள்ளி வாசலிலிருந்து வெளியேறுவதற்கு முன்பாக குர்ஆனிலேயே மகத்துவமிக்க ஓர் அத்தியாயத்தை உங்களுக்கு நான் கற்றுத்தர வேண்டாமா? என்று வினவியபடி எனது கையைப் பிடித்தார்கள். நாங்கள் (பள்ளிவாசலிலிருந்து)வெளியேற முனைந்த போது நான் (அவர்கள் வாக்களித்ததை நினைவூட்டி) அல்லாஹ்வின் தூதரே தாங்கள் குர்ஆனிலேயே மகத்துவம் பொருந்திய தோர் அத்தியாயத்தை நான் உங்களுக்குக் கற்றுத்தர வேண்டாமா? என்று கேட்டீர்களே! என்று வினவினேன். நபி (ஸல்) அவர்கள் (அது) அல்ஹம்துலில்லாஹி ரப்பில் ஆலமீன் (என்று தொடங்கும் அல்பாத்திஹா அத்தியாயமே) ஆகும். அது திரும்பத் திரும்ப ஓதப்படும் ஏழு வசனங்களும் எனக்கு வழங்கப் பெற்றுள்ள மேன்மை மிகு குர்ஆனுமாகும் என்று சொன்னார்கள்."** (அறிவிப்பவர்: அபூசயீத் பின் முஅல்லா (ரழி), நூல்: ஸஹீஹுல் புகாரி-5006)

ஆனால், குர்ஆனை அவமதிக்கும் வகையில் குறிப்பாக ஸூரத்துல் பாத்திஹாவை அவமதிக்கும் வகையில் ஹனபி மத்ஹபு நூல் பின்வருமாறு கூறுகிறது. சின்னி மூக்கு உடைந்து விட்டால் தன்னுடைய நெற்றியிலும் மூக்கிலும் இரத்தத்தைக் கொண்டு ஸூரத்துல் பாத்திஹா அத்தியாயத்தை எழுதிக் குணமாகும் எனில் அவ்வாறு குணமாவதற்காக எழுதுவது கூடும். சிறுநீரில் எழுதினால் குணம் கிடைக்கும் என்றால் பாத்திஹா அத்தியாயத்தை சிறுநீரில் எழுதுவதும் குற்றமில்லை. (இக்கருத்து ஹனபி மத்ஹபின் ஹாஷியது இப்னு ஆபிதீன் எனும் நூலில் பாகம்-1, பக்கம்-210ல் கூறப்பட்டுள்ளது)

குர்ஆனிலேயே சிறந்த மகத்துவமிக்க அத்தியாயமென்றும் அல்குர்ஆனின் தாயென்றும் போற்றப்படும் அல்ஹம்து அத்தியாயத்தை எந்த அளவு மதித்துள்ளார்கள் பாத்தீர்களா! அல்லாஹ்வின் வேதத்தை சிறுநீரில் எழுதச்சொல்லி அல்குர்ஆனை அவமதிக்கும் இந்த மத்ஹபை தூக்கிப் பிடிப்பது அவசியம்தானா? மத்ஹப் வாதிகள் சிந்திக்கட்டும்.

06. இஸ்லாம் தாம்பத்திய உறவின் மூலம் உடலியல் ரீதியான தேவைகளை பூர்த்தி செய்யுமாறு கூறுகிறது. ஒருவன் தனது ஆசையை மனைவியிடத்தில் எப்போது வேண்டுமானாலும் நிறைவேற்றிக்கொள்ள முடியும். திருமறை குர்ஆனில் 2:222ம் வசனத்தில் மாதவிலக்கு ஏற்படும்

நாட்களைத் தவிர மற்ற நாட்களில் எப்போது வேண்டுமானாலும் இல்லறத்தில் ஈடுபடலாம் என்று இறைவன் குறிப்பிடுகின்றான். ஆனால் இதற்கு நேர் மாற்றமாக ஷாபி மத்ஹபு நூல் பின்வருமாறு கூறுகிறது. மாதத்தில் முதல் நாள் இரவிலும் கடைசி இரவிலும் மாதத்தின் நடு இரவிலும் உடலுறவு கொள்வது வெறுப்பிற்குறியதாகும். காரணம் இந்நாட்களில் உடலுறவு கொல்லும் போது ஷைத்தான் விஜயம் செய்கிறான். என்று இஹ்யாவில் வருவதாக முக்னி என்ற நூலில் பதிவாகியுள்ளது. (இக்கருத்து ஷாபி மத்ஹபின் இஆனதுத் தாலிபீன் எனும் நூலில் பாகம்-3 பக்கம்-273ல் குறிப்பிடப்பட்டுள்ளது.) இவ்வாறாக நேரடியாகவே நபிவழிக்கு முரண்படக்கூடிய மத்ஹபுச் சட்டங்களை இன்னும் நாம் பின்பற்ற வேண்டுமா?

**இன்ஷா அழ்ழாஹ் வளரும்...**

**சட்டங்கள்**

# இஸ்லாத்தின் பார்வையில் இத்தா கடமையும் இல்லாத விதிமுறைகளும்

மௌலவி B.M. அஸ்பர் [பலாஹி]
asfarbm@ymail.com

"அழ்ழாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் மக்களிடையே (உரையாற்ற) எழுந்து நின்று, அழ்ழாஹ்வுக்கு நன்றி செலுத்தி, அவனைப் புகழ்ந்துரைத்துவிட்டு, சில மனிதர்களுக்கு என்ன நேர்ந்து விட்டது அழ்ழாஹ்வின் சட்டத்தில் இல்லாத நிபந்தனைகளையெல்லாம் விதிக்கின்றாகளே! அழ்ழாஹ்வின் சட்டத்தில் இல்லாத நிபந்தனை எதுவாயினும் அது செல்லாததாகும். அவர்கள் நூறுமுறை நிபந்தனையிட்டாலும் சரியே. அழ்ழாஹ்வின் தீர்ப்பே பின்பற்றத் தக்கதாகும். அழ்ழாஹ்வின் நிபந்தனையே உறுதியானதும் (கட்டுப் படுத்தக் கூடியதும்) ஆகும்."
(அறிவிப்பவர்: ஆயிஷா (ரழி), நூல்: ஸஹீஹுல் புஹாரி-2729)

இத்தா என்பதற்கு கணித்தல், எண்ணுதல் என்று பொருள்படும். இஸ்லாமிய மார்க்கத்தில் கணவனை இழந்த பெண்களும் தலாக் (மணவிலக்கு) செய்யப்பட்ட பெண்களும் குறிப்பிட்ட காலம் மறுமணம் செய்யாமல் காத்திருப்பது கடமையாகும். இவ்வாறு காத்திருப்பதற்கு அரபியில் 'இத்தா' என்று சொல்லப்படும்.

## இத்தாவின் வகைகள்

இஸ்லாம் இத்தா அனுஷ்டிக்கும் பெண்களைப் பொறுத்து இக்காலத்தை நான்கு வகைகளாகப் பிரிக்கின்றது.

**1. கணவனை இழந்த பெண்களின் இத்தாக் காலம்:** கணவனை இழந்த பெண்கள் நான்கு மாதங்களும் பத்து நாட்களும் 'இத்தா' இருக்க வேண்டும் என்று இஸ்லாம் குறிப்பிடுகின்றது. இறைவன் தனது திருமறையில், **" உங்களில் எவரேனும் மனைவியரை விட்டு மரணித்தால் நான்கு மாதங்களும் பத்து நாட்களும் (மறுமணம் செய்யாமல்) அப்பெண்கள் காத்திருக்க வேண்டும். அந்தக் காலக்கெடுவை நிறைவு செய்து விட்டால் அவர்கள் தம் விஷயமாக நல்ல முறையில் முடிவு செய்வதில் உங்கள் மீது எந்தக் குற்றமும் இல்லை. நீங்கள் செய்வதை அழ்ழாஹ் நன்கறிந்தவன்."** (அல்குர்ஆன் 2:234)

**2. விவாகரத்து செய்யப்பட்ட பெண்களின் இத்தாக் காலம்:** விவாகரத்து செய்யப்பட்ட பெண்கள் மூன்று மாதவிடாய்க் காலம் மறுமணம் செய்யக் கூடாது என இஸ்லாம் குறிப்பிடுகின்றது.

இறைவன் தனது திருமறையில், "**விவாக ரத்துச் செய்யப்பட்ட பெண்கள் மூன்று மாதவிடாய்க் காலம் (மறுமணம் செய்யாமல்) காத்திருக்க வேண்டும். அல்லாஹ்வையும், இறுதி நாளையும் அவர்கள் நம்பி இருந்தால் தமது கருவறைகளில் அல்லாஹ் படைத்திருப்பதை மறைப்பதற்கு அவர்களுக்கு அனுமதி இல்லை. இருவரும் நல்லிணக்கத்தை விரும்பினால் அவர்களின் கணவர்கள் அவர்களைத் திரும்பச் சேர்த்துக் கொள்ளும் உரிமை படைத்தவர்கள். பெண்களுக்குக் கடமைகள் இருப்பது போல அவர்களுக்கு உரிமை களும் சிறந்த முறையில் உள்ளன. அவர்களை விட ஆண்களுக்கு ஓர் உயர்வு உண்டு. அல்லாஹ் மிகைத்தவன் ஞானமிக்கவன்.**" (அல்குர்ஆன் 2:228)

**குறிப்பு:** தலாக் சொல்லப்பட்ட பெண்களைப் பொருத்து தலாக்குடைய இத்தாக் காலம் மாறுபடும். (பார்க்க: ஸூரதுத் தலாக் அத்தியாயம்)

**3. மாதவிடாய் அற்றுப் போன பெண்களின் இத்தாக் காலம்:** மாதவிடாய் அற்றுப் போன பெண்கள் மூன்று மாதங்கள் 'இத்தா' இருக்க வேண்டும் என்று இஸ்லாம் குறிப்பிடுகின்றது. இறைவன் தனது திருமறையில், "**உங்கள் பெண்களில் மாதவிடாய் அற்றுப் போனவர்கள் விஷயத்தில் நீங்கள் சந்தேகப்பட்டால் அவர்களுக்கும், மாதவிடாய் ஏற்படாதோருக்கும் உரிய காலக்கெடு மூன்று மாதங்கள். கர்ப்பிணிகளின் காலக்கெடு அவர்கள் பிரசவிப்பதாகும். அல்லாஹ்வை அஞ்சுவோருக்கு அவரது காரியத்தை அவன் எளிதாக்குவான்.**" (அல்குர்ஆன் 65:04)

**4. கர்ப்பிணிப் பெண்களின் இத்தாக் காலம்:** கர்ப்பிணிப் பெண்கள் குழந்தையைப் பெற்றெடுக்கும் வரை 'இத்தா' இருக்க வேண்டும் என்று இஸ்லாம் குறிப்பிடுகின்றது. இறைவன் தனனது திருமறையில், "**உங்கள் பெண்களில் மாதவிடாய் அற்றுப் போனவர்கள் விஷயத்தில் நீங்கள் சந்தேகப்பட்டால் அவர்களுக்கும், மாதவிடாய் ஏற்படாதோருக்கும் உரிய காலக்கெடு மூன்று மாதங்கள். கர்ப்பிணிகளின் காலக்கெடு அவர்கள் பிரசவிப்பதாகும். அல்லாஹ்வை அஞ்சுவோருக்கு அவரது காரியத்தை அவன் எளிதாக்குவான்.**" (அல்குர்ஆன் 65:04)

## எதற்காக இறைவன் இத்தாக் காலத்தை ஏற்படுத்தியுள்ளான்.

இத்தாக் காலத்தை எதற்காக இறைவன் ஏற்படுத்தினான் என்ற காரணங்கள் அல்குர்ஆனிலோ, ஆதாரப்பூர்வமான நபிமொழிகளிலோ குறிப்பிடப்படவில்லை. எனினும் நடைமுறை ரீதியாக ஏற்படுகின்ற பின்வரும் சில பிரச்சினைகளுக்கு தீர்வுகாண இந்த இத்தாக் காலம் துணையாக உள்ளது.

## குழந்தையின் எதிர்காலம் பாதிக்கப்படாதிருத்தல்

ஒரு பெண் கணவனை இழந்த அல்லது தலாக் சொல்லப்பட்ட மறுநிமிடம் திருமண பந்தத்தில் இணையும் போது ஏற்கனவே உள்ள கணவனின் கருவை சுமந்தவளாக இருந்தால் இரண்டாமவரை திருமணம் முடித்து குழந்தை பெற்றெடுக்கும் போது அக்குழந்தையை இரண்டாவது திருமணம் செய்தவன் சந்தேகிப்பதற்கு வாய்ப்புள்ளது. அவ்வாறு சந்தேகித்தால் ஒன்றுமறியாத அக்குழந்தையின் எதிர்காலம் பாதிக்கப்படும்.

## கருவுற்றதை அறிந்து அவள் மறைக்க முயற்சிக்காமலிருத்தல்.

ஒரு பெண் தான் கருவுற்றுள்ளதை முதல் மாதத்திலேயே அறிந்து கொள்வாள். இவ்வாறான நேரத்தில் அதை வெளியில் சொல்லாமல் அப்பெண் மறைக்க முற்படலாம். ஆனால் இத்தாக் காலத்தினை முழுமையாக அனுஷ்டிக்கும் போது அதை மறுக்க முடியாமல் போய்விடும்.

## இரண்டாம் கணவன் சந்தேகிக்காதிருத்தல்.

குறைப் பிரசவத்தில் குழந்தையைப் பெற்றெடுக்கும் போது இரண்டாம் கணவன் சந்தேகப்படுவான். இதனால் மணவாழ்க்கையில் குழப்பங்கள் ஏற்படும். நான்கு மாதங்கள் பத்து நாட்கள் இத்தா இருக்கின்ற போது இவ்வாறு கூற முடியாது. இவ்வாறான நடைமுறை ரீதியான

பிரச்சினைகளுக்கு தீர்வாக இந்த இத்தாக்காலம் அமைவதை நாம் கவனத்திற் கொள்ள வேண்டும்.

## இத்தாக் காலத்தில் கடைப்பிடிக்க வேண்டிய அம்சங்கள்

இத்தா அனுஷ்டிக்கும் பெண்கள் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்று இஸ்லாமிய மார்க்கம் தெளிவாகச் சொல்லித் தருகின்றது. இவ்வாறான நாட்களில் சுர்மா இடவோ, மணப் பொருட்களைப் பூசவோ, சாயமிடப்பட்ட ஆடைகளை அணியவோ, திருமணம் முடிக்கவோ, திருமணப் பேச்சை வெளிப்படையாக பேசவோ கூடாது. ஆனால், நெய்வதற்கு முன் நூலில் சாயமிடப்பட்டு தயாரிக்கப்படும் ஆடைகளை அணியலாம். அதனை பின்வரும் நபிமொழி தெளிவுபடுத்துகின்றது. **“இறந்து விட்டவர்களுக்காக மூன்று நாட்களுக்கு மேல் (அலங்காரம், நறுமணம் உள்ளிட்டவற்றைக் கைவிட்டு) துக்கம் கடைப் பிடிக்கக் கூடாதென நாங்கள் (நபியவர்களால்) தடைவிதிக்கப் பட்டோம். ஆனால் (கணவருக்காக அவர் இறந்தபின் அவருடைய) மனைவி நான்கு மாதம் பத்து நாட்கள் (துக்கம் கடைபிடிப்பதைத்) தவிர! (அதாவது இந்த நாட்களில்) நாங்கள் (கண்ணில்) சுருமா தீட்டவோ, நறுமணம் பூசவோ, சாயமிட்ட ஆடைகளை அணிவதோ கூடாது. ஆனால் நெய்வதற்கு முன் நூலில் சாயமிடப்பட்ட (அஸ்ப் எனும்) ஆடையைத் தவிர! (அதை அணிந்து கொள்ளலாம்.) எங்களில் ஒரு பெண் மாதவிடாயிலிருந்து நீங்கக் குளிக்கும்போது, ளிஃபார், நகரத்து குஸ்த் (கோஷ்டம் அல்லது அகில்) கட்டைத் துண்டைப் பயன்படுத்திக்கொள்ள எங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது. மேலும் நாங்கள் ஜனாஸாவைத் தொடர்ந்து செல்ல வேண்டாமெனத் தடைவிதிக்கப் பட்டிருந்தோம்”** (அறிவிப்பவர்: உம்மு அத்திய்யா நுஸைபா பின்த் அல்ஹாரிஸ் (ரழி), நூல்: ஸஹீஹுல் புஹாரி-313)

இறைவன் திருமறையில், **“(காத்திருக்கும் காலகட்டத்தில்) அவர்களை மணம் செய்ய எண்ணுவதோ, சாடை மாடையாக மணம் பேசுவதோ உங்கள் மீது குற்றம் இல்லை. அவர்களை நீங்கள் (மனதால்) விரும்புவதை அல்லாஹ் அறிவான். நல்ல சொற்கள் சொல்வதைத் தவிர இரகசியமாக அவர்களுக்கு வாக்குறுதி அளித்து விடாதீர்கள்! உரிய காலம் முடியும் வரை திருமணம் செய்யும் முடிவுக்கு வராதீர்கள்! உங்களுக்குள்ளே இருப்பதை அல்லாஹ் அறிவான் என்பதை அறிந்து அவனுக்கு அஞ்சுங்கள்! அல்லாஹ் மன்னிப்பவன் சகிப்புத்தன்மை மிக்கவன் என்பதையும் அறிந்து கொள்ளுங்கள்!”** (அல்குர்ஆன் 2:235)

## இத்தாவில் இல்லாத விதிமுறைகள்

இன்று முஸ்லிம்கள் இத்தா அனுஷ்டிக்கும் பெண்களை மார்க்கம் காட்டித் தராத அடிப்படைகளில் வழிநடத்துவதைக் காணலாம். இருட்டறையில் அடைத்து வைப்பது, ஆண்களைப் பார்க்க கூடாது என்று தடைவிதிப்பது, அத்துடன் கர்ப்பிணித் தாய்மார்களைப் பார்க்க விடாது தடுப்பது, இத்தா இருக்கும் பெண்ணுக்கு நோய் ஏற்பட்டால் ஆண் வைத்தியரிடம் கொண்டு செல்வது கூட தடையெனக் கருதுவது, மற்றும் இன்னும் சிலர் வருடம் முழுவதும் துக்கமாகவே கருதுதல் இவ்வாறான மூட நம்பிக்கைகள் திருமறைக் குர்ஆனின் (2:235) வசனத்திற்கு மாற்றமாகும். மேற்சொன்ன விடயங்களுக்கும் இஸ்லாத்திற்கும் எந்த சம்பந்தமும் கிடையாது. மாறாக, அவர் வீட்டிலிருந்து வெளியே சென்று யாரையும் பார்த்து பேச வேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டால் அதற்கும் இஸ்லாம் அனுமதி வழங்குகின்றது. அதை பின்வரும் ஹதீஸ் தெளிவு படுத்துகின்றது.

**“என் தாயின் சகோதரி மணவிலக்குச் செய்யப்பட்டார். அவர் (இத்தாவில் இருந்த போது) தமது பேரீச்ச மரத்தின் கனிகளைப் பறிக்க விரும்பினார். (இத்தருணத்தில்) நீ வெளியே செல்லக் கூடாதென அவரை ஒருவர் கண்டித்தார். ஆகவே, என் தாயின் சகோதரி, நபி (ஸல்) அவர்களிடம் வந்(து, அது குறித்துத் தெரிவித்)த போது நபி (ஸல்) அவர்கள், ‘ஆம், நீ சென்று உமது பேரீச்ச மரத்தின் கனிகளைப் பறித்துக்கொள். ஏனெனில், (அதில் கிடைக்கும் வருமானத்தில்) நீ தர்மம் செய்யக் கூடும், அல்லது ஏதேனும் நல்லறம் புரியக் கூடும்’ என்றார்கள்.”** (அறிவிப்பவர்: ஜாபிர் பின் அப்தில்லாஹ் (ரழி), நூல்: ஸஹீஹ் முஸ்லிம்-2972)

மேற்கூறப்பட்ட ஹதீஸில் இத்தாவில் இருந்த பெண் தேவை ஏற்படும் வேளையில் வெளியே சென்று ஆணாக இருந்த நபிகளார் (ஸல்) அவர்களை சந்தித்துப் பேசியுள்ளார் என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

## இத்தாவிலிருந்து வெளிவரும் போது

இத்தா இருக்கும் பெண்கள் வெளிவரும் போதும் முரணான காரியங்களைச் செய்வதைக் காணலாம். யாரையும் பார்ப்பதற்கு முன் குர்ஆனைப் பார்ப்பது, ஆலிம்களுடைய முகத்தில் முழிப்பது, ரொட்டி சுட்டு பாத்திஹா ஓதுவது, சில ஊர்களில் யாரும் பார்க்காத வேளையில் வெளியேறி எங்காவது சென்றுவிட்டு இரவு நேரத்தில் திரும்புவது அவைகள் எல்லாம் மூடநம்பிக்கைகளும், மார்க்கத்தில் இல்லாத நிபந்தனைகளும், விதிமுறைகளுமாகும். இவையனைத்தும் நிராகரிக்கப்பட வேண்டியவைகளாகும்.

**“அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் மக்களிடையே (உரையாற்ற) எழுந்து நின்று, அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தி, அவனைப் புகழ்ந்துரைத்துவிட்டு, சில மனிதர்களுக்கு என்ன நேர்ந்து விட்டது அல்லாஹ்வின் சட்டத்தில் இல்லாத நிபந்தனைகளையெல்லாம் விதிக்கின்றாகளே! அல்லாஹ்வின் சட்டத்தில் இல்லாத நிபந்தனை எதுவாயினும் அது செல்லாததாகும். அவர்கள் நூறுமுறை நிபந்தனையிட்டாலும் சரியே. அல்லாஹ்வின் தீர்ப்பே பின்பற்றத் தக்கதாகும். அல்லாஹ்வின் நிபந்தனையே உறுதியானதும் (கட்டுப் படுத்தக் கூடியதும்) ஆகும்.”** (அறிவிப்பவர்: ஆயிஷா (ரழி), நூல்: ஸஹீஹுல் புஹாரி-2729)

அன்பார்ந்த இஸ்லாமிய சகோதர, சகோதரிகளே! நாம் பின்பற்றும் மார்க்கம் இலகுவானது. அதில் நாமாக சில நிபந்தனைகளையும், விதிமுறைகளையும் ஏற்படுத்தி நமக்கு நாமே சிரமத்தை ஏற்படுத்திக் கொள்கின்றோம். மாற்று மதத்தில் இருந்து பிரதியெடுக்கப்பட்ட இவ்வாறான விதிமுறைகள் முஸ்லிம் சமுதாயத்திலிருந்து தூரமாக்கப்பட வேண்டும். அதற்கு நாம் செய்ய வேண்டியது இறைவனும் இறைத்தூதரும் சொன்ன விடயங்களை மாத்திரம் எமது வாழ்வில் எல்லா சந்தர்ப்பத்திலும் எடுத்து நடப்பதாகும். அதுவே ஈருலக வெற்றிக்கும் வழிவகுக்கும்.

விழிப்புணர்வு

# நிரந்தர நரகத்தினைப் பெற்றுத் தரும் தற்கொலை

முஹம்மட் அர்ஷாத் அல் அதரி
arshathalathary@gmail.com

**"யார் தமது கழுத்தை நெறித்துத் தற்கொலை செய்து கொள்கின்றாரோ, அவர் நரகத்திலும் தமது கழுத்தை நெரித்துக்கொண்டிருப்பார். யார் தம்மைத் தாம் (ஆயுதத்தால்) தாக்கித் தற்கொலை செய்துகொள்கின்றாரோ அவர் நரகத்திலும் தம்மை ஆயுதத்தால் தாக்கிக்கொண்டிருப்பார் என்று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்."** (அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரழி), நூல்: ஸஹீஹுல் புஹாரி-1365)

இன்றைய பத்திரிகைகள் மற்றும் உள்ள வெகுஜன ஊடகங்களில்...

**'பல்கலைக்கழக மாணவி தீக்குளித்து தற்கொலை'**

**'சீதனக் கொடுமையால் இளம் பெண் தற்கொலை'**

**'பெற்ற கடனுக்கு வட்டி கட்ட முடியாத விவசாயி தற்கொலை'** போன்ற செய்திகளே அதிகளவில் காணப்படுகின்றன.

இன்பமும் துன்பமும் இணைந்ததுதான் மனித வாழ்க்கை. இவ்வாழ்க்கைப் பயணத்தில் ஒரு சிலரின் வாழ்வு வசந்தம் வீசுகின்ற இன்பப் பூஞ்சோலையாக இருக்கின்றது. சிலரின் வாழ்வோ சோதனைகளும், வேதனைகளும் நிறைந்த வரண்ட பாலைவனமாகக் காணப்படுகின்றது. மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவருக்கும் சோதனைகளும், வேதனைகளும் உண்டு. ஏனெனில் துன்பங்களும், துயரங்களும் மனித வாழ்வோடு பிண்ணிப் பிணைந்தது. மாத்திரமன்றி அதுவே இறைவனின் நியதியுமாகும். இதனையே அருள்மறைக் குர்ஆன் பின்வருமாறு குறிப்பிடுகின்றது. **"ஓரளவு அச்சத்தாலும், பசியாலும் செல்வங்கள், உயிர்கள், மற்றும் பலன்களைச் சேதப்படுத்தியும் உங்களைச் சோதிப்போம். பொறுத்துக் கொண்டோருக்கு நற்செய்தி கூறுவீராக!"** (அல்குர்ஆன் 2:155)

மேலுள்ள திருமறை வசனம் பயம், பஞ்சம், பசி, பட்டினி, உயிரிழப்புக்கள் மற்றும் சேதங்கள் போன்ற இன்னோரன்ன காரணிகளால் சோதனைகளை எதிர்நோக்கியே ஆகவேண்டும் எனவும், இவ்வாறான துன்பங்களும், துயரங்களும் நிறைந்த நேரத்தில் பொறுமையைக்

கடைப்பிடிப்பவர்களுக்கு சுபசோபனமும் கூறுகின்றது. இவ்வாறு சோதனைகளுக்கும், வேதனைகளுக்கும் உள்ளாவோரில் முஸ்லிம்கள், முஸ்லிமல்லாதவர் என்ற பாகுபாடின்றி அனைவரும் சமமாகவே உள்ளனர். விசுவாசங் கொண்ட முஸ்லிம்கள் என்பதற்காக அவர்களை சோதனைகளும், வேதனைகளும் வந்தடையாதிருப்பதில்லை. இதனைத் திருமறைக்குர்ஆன் பின்வருமாறு குறிப்பிடுகின்றது. **“நம்பிக்கை கொண்டோம் என்று கூறியதன் காரணமாக சோதிக்கப்படாமல் விடப்படுவார்கள் என மனிதர்கள் நினைத்து விட்டார்களா?”** (அல்குர்ஆன் 29:02)

இவ்வாறு துன்பங்களும், துயரங்களும், கஷ்டங்களும், கடினங்களும் எம்மை வந்தடைகையில் பலர் நிரந்தர நரகத்தினைப் பெற்றுத் தரக்கூடிய தற்கொலையையே தீர்வாக நினைக்கின்றனர். தனது உயிரினை மாய்த்துக் கொள்வதனால் தனது துன்பங்களுக்கும், துயரங்களுக்கும் தீர்வு கிடைத்து விட்டதாக எண்ணுகின்றனர். தற்கொலையைத் தீர்வாக நினைக்க கூடியவர்கள், தான் மாத்திரமே உலகில் பிரச்சினைகளை எதிர்நோக்குவதாக கருதுகின்றனர். உலகில் யாருமே எதிர்நோக்காத பிரச்சினைகள் தனக்கு வந்துவிட்டதாக கருதியே நிரந்தர நரகவாதியாக்கும் தற்கொலைக் கலாசாரத்தினை கையில் எடுக்கின்றனர். ஏழைக்கு உண்பதற்கு உணவில்லை என்கின்ற பிரச்சினை என்றால் பணக்காரனுக்கு இருக்கின்ற உணவினை உண்ண முடியாத சூழ்நிலை. ஆக மொத்தத்தில் ஒவ்வொரு மனிதனும் வெவ்வேறு வடிவங்களில் தினந்தோறும் சோதனைகளையும், வேதனைகளையும் அனுபவித்துக் கொண்டேயிருக்கின்றான். இதனை அருள்மறை குர்ஆன் குறிப்பிடுகையில், **“உங்களையே கொன்று விடாதீர்கள்! அல்லாஹ் உங்கள் மீது நிகரற்ற அன்புடையோனாக இருக்கிறான்.”** (அல்குர்ஆன் 29:02) என்று கூறுகின்றது.

உயிரை மாய்த்துக் கொள்வதன் மூலம் நமது கஷ்டங்களும், கடினங்களும் அகன்று விடும் என தற்கொலைக் கலாசாரத்தை கையிலெடுக்கக் கூடியவர்கள் நினைக்கின்றார்கள். ஆனால் மறுமையில் கிடைக்க கூடிய நிரந்தர நரகத்தினை மறந்து விடுகின்றார்கள். உலகில் வீர, தீரமாகப் பேசக் கூடிய சிலர் கூட தனது சொந்த வாழ்வு என வருகையில் தன்னுயிரை தானே மாய்த்துக் கொள்ளும் தடுக்கப்பட்ட செயலைச் செய்து விடுகின்றனர். இதற்குச் சிறந்த சான்றாக கொடுங்கோலன் ஹிட்லரின் வாழ்வு அமைந்துள்ளது. பல இலட்ச மனித உயிர்களை காவு கொண்ட கொடுங்கோலன் ஹிட்லர் தானியக் கிடங்கில் தூக்கிட்டு இறந்ததாக வரலாறு நமக்குச் சான்று பகர்கின்றது.

மேலும், அருள்மறைக் குர்ஆனையும், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களது உன்னதமான வழிகாட்டலினையும் அனுவனுவாகப் பின்பற்றக் கூடியவர்களானாலும் இவ்வுலகில் கஷ்டங்கள், சோதனைகளில் இருந்து விதிவிலக்களிக்கப்படமாட்டார்கள் என்பதனை திருமறைக் குர்ஆன் பின்வருமாறு கூறுகின்றது. **“இப்ராஹீமை அவரது இறைவன் பல கட்டளைகள் மூலம் சோதித்த போது அவற்றை அவர் முழுமையாக நிறைவேற்றினார்.”** (அல்குர்ஆன் 02:124) இவ்வாறான நேரங்களில் ஒரு விசுவாசி எவ்வாறு நடந்து கொள்ள வேண்டுமென அல்குர்ஆன் கற்றுத் தருகின்றது. **“நம்பிக்கை கொண்ட எனது அடியார்களே! உங்கள் இறைவனை அஞ்சுங்கள்! இவ்வுலகில் நன்மை செய்தோருக்கு நன்மையே உள்ளது. அல்லாஹ்வின் பூமி விசாலமானது. பொறுமையாளர்களுக்குக் கணக்கின்றி கூலி வழங்கப்படும் என்று (இறைவன் கூறுவதைத்) தெரிவிப்பீராக!”** (அல்குர்ஆன் 39:10)

மேலும், எம்மை கஷ்டங்களும், சோதனைகளும் வந்தடைகையில் இறைவன் எம்மை இவ்வாறு சோதனைகளைத் தந்து சோதிக்கின்றான். இதன் மூலம் அவன் எம்மை நேசிக்கின்றான் என நாம் எண்ணுகையில் பிரச்சினைகள் மலையெனக் குவிந்த போதிலும் இறை நம்பிக்கைக்கு முன் பெரிதாகத் தோன்றாது. இவ்வாறாக, எம்மை சோதிக்கின்ற இறைவன் இத்தகைய சோதனைகளுக்கு பகரமாக எம்மீது கொண்ட அளவிலா கருணையின் காரணமாக எமது பாவங்களையும் மன்னிக்கத் தவறுவதில்லை. **“அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள். யாருக்கு அல்லாஹ் நன்மையை நாடுகின்றானோ அவரை (சத்திய) சோதனைக்கு உள்ளாக்குகின்றான்.”** (அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரழி), நூல்: புஹாரி-5645) மேலும், **“அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள். ஒரு முஸ்லிமைத் தைக்கும் முள்**

**உள்பட அவருக்கு நேரிடும் துன்பம், நோய், துக்கம், கவலை, தொல்லை, மனவேதனை ஆகிய எதுவாயினும் அதற்கு பதிலாக அவருடைய பாவங்களிலிருந்து சிலவற்றை அல்லாஹ் மன்னிக்காமல் இருப்பதில்லை.**" (அறிவிப்பவர்: அபூசயீத் அல்குத்ரி (ரழி), நூல்: ஸஹீஹுல் புஹாரி-5641)

நாம் எதிர் நோக்குகின்ற பிரச்சினைகளுக்கு தற்கொலைதான் தீர்வு என்றால் இவ்வுலகினில் வீடுகளுக்கு பதிலாக மயான பூமிகளே மிகுதியாக காணப்படும். எமது உயிருக்கு சொந்தக்காரன் அல்லாஹ் மாத்திரமே. அதனை எடுக்கும் உரிமையும் அவனுக்கு மாத்திரமே உண்டு. நாம் தற்கொலை மூலம் உயிரை மாய்த்துக் கொள்வது அல்லாஹ்வின் தனி அதிகாரத்தில் தலையிடுவதாகும். அதனால்தான் இறைவன் மிகப் பெரும் தண்டனையான நிரந்தர நரகத்தை இதற்கான தண்டனையாக நிர்ணயித்திருக்கின்றான். கொடிய நரகத்தினைப் பெற்றுத் தரும் இத்தற்கொலை கலாசாரமானது ஏனைய சமுதாயங்களுடன் ஒப்பிடுகையில் முஸ்லிம்களிடம் குறைவாயினும், அவ்வப்போது இவ்வாறான தற்கொலைச் சம்பவங்கள் எமது சமூகத்தில் இடம் பெறாமலுமில்லை.

தற்கொலையை தீர்வாக எடுப்பவர்களைப் பற்றி அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறுகையில், "**யார் தமது கழுத்தை நெறித்துத் தற்கொலை செய்து கொள்கின்றாரோ, அவர் நரகத்திலும் தமது கழுத்தை நெரித்துக்கொண்டிருப்பார். யார் தம்மைத்தாம் (ஆயுதத்தால்) தாக்கித் தற்கொலை செய்து கொள்கின்றாரோ அவர் நரகத்திலும் தம்மை ஆயுதத்தால் தாக்கிக்கொண்டிருப்பார்.**" (அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரழி), நூல்: ஸஹீஹுல் புஹாரி-1365)

"**யார் மலையின் மீதிருந்து கீழே குதித்து தற்கொலை செய்து கொள்கிறாரோ அவர் நரக நெருப்பில் (தள்ளப்பட்டு மேலிருந்து கீழே) என்றைக்கும் நிரந்தரமாக குதித்துக்கொண்டேயிருப்பார். யார் விஷம் குடித்து தற்கொலை செய்து கொள்கிறாரோ அவர் தமது விஷத்தைக் கையில் வைத்திருந்தபடி நரக நெருப்பில் என்றென்றும் நிரந்தரமாக குடித்துக்கொண்டேயிருப்பார். யார் ஒரு கூரிய ஆயுதத்தால் தற்கொலை செய்து கொள்கிறாரோ அவருடைய கூராயுதத்தை அவர் தமது கையில் வைத்துக்கொண்டு நரக நெருப்பில் தமது வயிற்றில் தாமே என்றென்றும் நிரந்தரமாக அதனால் குத்திக் கொண்டேயிருப்பார்.**" (அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரழி), நூல்: ஸஹீஹுல் புஹாரி-5778)

"**ஜுன்துப் (ரழி) அவர்கள் இந்த (பஸ்ராவின்) பள்ளிவாசலில் வைத்து எங்களிடம் (ஒரு ஹதீஸைக்) கூறினார்கள். அதை நாங்கள் மறக்கவில்லை. மேலும் ஜுன்துப் (ரழி) அவர்கள், நபி (ஸல்) அவர்கள் விஷயத்தில் பொய்யைக் கூறியிருப்பார் என்று நாங்கள் அஞ்சவுமில்லை. அவர்கள் கூறியதாவது: ஒருவருக்கு ஒரு காயம் இருந்தது. (இதைத் தாங்க முடியாமல்) அவர் தற்கொலை செய்துகொண்டார். உடனே அல்லாஹ், என் அடியான் அவனது மரணத்தில் அவசரப்பட்டு என்னை முந்திவிட்டான், எனவே அவனுக்குச் சொர்க்கத்தை நான் ஹராமாக்கிவிட்டேன், எனக் கூறினான் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.**" (அறிவிப்பவர்: ஹஸன் அல்பஸ்ரீ (ரஹ்), நூல்: ஸஹீஹுல் புஹாரி-1364)

மேலுள்ள நபிமொழிகள் மூலம் தற்கொலைக் கலாசாரத்தை கையிலெடுப்பவர்கள் பெறக்கூடிய தண்டனையை அறிந்த முஸ்லிம்கள் நிரந்தர நரகத்தினைப் பெற்றுத் தரக்கூடிய இத் தற்கொலைக் கலாசாரத்தை கனவில் கூட நினைக்க மாட்டார்கள்.

## ஜனாஸாத் தொழுகை கிடையாது.

நிரந்தர நரகத்தை ஈட்டித் தரக் கூடிய தற்கொலைக் கலாசாரத்தை கையிலெடுப்பவர்களுக்கு அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் ஜனாஸா தொழுகை நடாத்தவில்லை. "**ஒரு மனிதர் நோயுற்ற போது அவர் திடுக்கத்துக்குள்ளானார். அவருடைய அண்டை வீட்டுக்காரர் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம் வந்து, "அவர் இறந்து விட்டார்" என்று சொன்னார். அதற்கு அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், "அவர் இறந்தது உனக்குத் தெரியுமா?" என்று கேட்டார்கள். "நான் அவரை (இறந்திருக்கக்) கண்டேன்" என்று**

**அம்மனிதர் கூறினார். அதற்கு அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் "அவர் இறக்கவில்லை" என்று சொன்னார்கள். பிறகு அம்மனிதர், (நோயாளியிடம்) வந்ததும் அவர் கூரான ஈட்டியால் தன்னை அறுத்துக் கொண்டதைக் கண்டார். உடனே, அம்மனிதர் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம் வந்து, "அவர் இறந்து விட்டார்" என்று தெரிவித்தார். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், "அவர் இறந்தது உனக்கு எப்படித் தெரியும்?" என்று கேட்டார்கள். அதற்கு அம்மனிதர், "அவர் தன்னிடமிருந்த கூரிய முனையுள்ள ஈட்டியால் அறுத்துக் கொள்வதை நான் பார்த்தேன்." என்றார். "நீ பார்த்தாயா?" என்று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கேட்க, அவர் ஆம் என்றார். "அப்படியானால் நான் அவருக்குத் தொழுவிக்கமாட்டேன்" என்று சொன்னார்கள்."** (அறிவிப்பவர்: ஜாபிர் பின் சமுரா (ரழி), நூல்: ஸஹீஹ் முஸ்லிம்-1779, அபூதாவூத்-3185)

**"அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுடன் நாங்கள் கைபர் போரில் கலந்துகொண்டோம். அப்போரின்போது அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் தம்முடன் இருந்தவர்களில் தம்மை முஸ்லிம் என்று சொல்லிக்கொண்ட ஒருவரைப் பற்றி இவர் நரகவாசிகளில் ஒருவர் என்று கூறினார்கள். போரிடும் நேரம் வந்தபோது அந்த மனிதர் மிகக் கடுமையாகப் போரிட்டார். அப்போது அவருக்கு நிறைய காயங்கள் ஏற்பட்டு அவரை உட்காரவைத்து விட்டன. அப்போது நபித்தோழர்களில் ஒருவர் வந்து அல்லாஹ்வின் தூதரே! தாங்கள் எவரைக் குறித்து அவர் நரகவாசி என்று சொன்னீர்களோ அவர் இறைவழியில் கடுமையாகப் போரிட்டு அதிகமான காயங்கள் அடைந்துள்ளார் என்று கூறினார். அப்போதும் நபி (ஸல்) அவர்கள் அவர் நரகவாசிகளில் ஒருவர்தாம் என்றே கூறினார்கள். அப்போது முஸ்லிம்களில் சிலர் (நபி (ஸல்) அவர்களின் இச்சொல் குறித்து) சந்தேகப்படும் அளவுக்கு போய்விட்டார்கள். நிலைமை இவ்வாறு இருக்கும்போது, அந்த மனிதர் காயத்தின் வேதனையை உணரலானார். உடனே அவர் தமது கையை அம்புக்கூட்டுக்குள் நுழைத்து அதிலிருந்து ஓர் அம்மை உருவி அதன் மூலம் தற்கொலை செய்துகொண்டார். உடனே முஸ்லிம்களில் சிலர் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம் விரைந்து வந்து அல்லாஹ்வின் தூதரே! தங்களின் அறிவிப்பை அல்லாஹ் உண்மையாக்கிவிட்டான். இன்ன மனிதர் தற்கொலை செய்து தம்மை மாய்த்துக் கொண்டார். (அதனால் அவர் நரகவாசிகளில் ஒருவராகிவிட்டார்) என்று கூறினர். அப்போது அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் பிலாலே! எழுந்து சென்று இறை நம்பிக்கையாளர் தவிர வேறெவரும் சொர்க்கத்தில் நுழைய முடியாது. மேலும், அல்லாஹ் இந்த மார்க்கத்திற்குப் பாவியான மனிதனின் மூலமாகவும் வலுவூட்டுகின்றான் என்று (மக்களிடையே) அறிவிப்புச் செய்யுங்கள் என்று கூறினார்கள்."** ( அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரழி), நூல்: ஸஹீஹுல் புஹாரி-6606)

மேலுள்ள நபிமொழிகள் ஒருவர் இஸ்லாத்திற்காக அளப்பெரிய தியாகம் செய்தவராக இருந்தாலும், அவரின் இறுதி முடிவு தற்கொலையாக இருக்குமாயின் அவர் இஸ்லாத்தை விட்டு வெளியேறியவராகவே மரணிக்கின்றார் என்பதையும், அவருக்கு ஜனாஸா தொழுகை நடாத்த முடியாது என்பதனையும் அறிந்து கொள்ளலாம். மனிதன் என்கின்ற வகையில் எம்மை பல்வேறு சோதனைகளும், வேதனைகளும் வந்தடையலாம். ஒருவர் நீண்டகாலமாக தாங்கொணா நோயினால் சிரமப்படலாம். இன்னும் சிலருக்கு தொடர்ச்சியாக மிக நெருங்கியவர்களின் மரணங்கள் சம்பவிக்கலாம். மிகச் செல்வந்தனாக வாழ்ந்த ஒருவர் எதிர்பாராத முறையில் தனது சொத்து, சுகங்கள் அனைத்தையும் இழக்க நேரிடலாம். இவ்வாறாக, எம்மை நோக்கி அடுக்கடுக்காக சோதனைகள் தொடர்ந்தாலும் மறுமையை நம்பிய விசுவாசிகளான நாம் ஒரு போதும் இத்தற்கொலைக் கலாசாரத்தினை தீர்வாக நினைக்க கூடாது. மாறாக, ஒரு முஸ்லிம் இது இறைவனின் 'கழாகத்ர்' (விதி) அடிப்படையில் நிகழ்ந்தது என்று இறைவன் மீது முழுப் பொறுப்புச் சாட்டுவதுடன், எமது உள்ளங்கள் அமைதி இழந்து காணப்படுகின்ற நேரங்களில் இறைவனை நினைவு கூர்ந்து உள்ளத்தினை அமைதிப்படுத்த வேண்டும். இதனையே அருள்மறைக் குர்ஆன் பின்வருமாறு குறிப்பிடுகின்றது. **"நம்பிக்கை கொண்டோரின் உள்ளங்கள் அல்லாஹ்வின் நினைவால் அமைதியுறுகின்றன. கவனத்தில் கொள்க! அல்லாஹ்வின் நினைவால்தான் உள்ளங்கள் அமைதியுறுகின்றன."** (அல்குர்ஆன் 13:28)

தற்கொலைக் கலாசாரத்தை கையிலெடுப்பவருக்கு நிரந்தர நரகம் என எச்சரிக்கின்ற இஸ்லாம் இவ்வாறான சோதனைகளையும், வேதனைகளையும் தாங்க முடியாது எனக் கருதுகின்றவர்களை நோக்கி இறுதியாக, பிரார்த்தனை ஒன்றைக் கற்றுத் தருகின்றது.

**“அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள். உங்களில் எவரும் தமக்கு நேர்ந்த ஒரு துன்பத்தின் காரணத்தினால் மரணத்தை விரும்ப வேண்டாம். அவ்வாறு மரணத்தை விரும்பித்தான் ஆக வேண்டும் என்றிருந்தால், ‘இறைவா! (நான்) உயிர்வாழ்வது எனக்கு நன்மையாக இருப்பின், என்னை உயிர் வாழச் செய்வாயாக! நான் இறந்துவிடுவதே எனக்கு நன்மையாக இருப்பின், எனக்கு இறப்பைத் தருவாயாக!’ என்று கேட்கட்டும்.”** (அறிவிப்பவர்: அனஸ் (ரழி), நூல்: ஸஹீஹுல் புஹாரி-6351)

இறுதியாக, எம்மை நோக்கி எவ்வாறான சோதனைகள், வேதனைகள் ஏற்பட்ட போதிலும் கொடிய நரகத்தினைப் பெற்றுத் தரும் இத்தற்கொலைக் கலாசாரத்திலிருந்து எம்மனைவரையும் அல்லாஹ் காத்தருள்வானாக!

**அறிவியல்**

# பெருவெடிப்புக் கொள்கையும் (Big Bang Theory) உண்மைப்படுத்தும் இறைவேதமும்

முஹம்மட் அர்ஷாத் அல் அதரி
arshathalathary@gmail.com

**“வானங்களும், பூமியும் இணைந்திருந்தன என்பதையும், அவ்விரண்டையும் நாமே பிரித்தோம் என்பதையும், உயிருள்ள ஒவ்வொரு பொருளையும் தண்ணீரிலிருந்து அமைத்தோம் என்பதையும் (நம்மை) மறுப்போர் சிந்திக்க வேண்டாமா? அவர்கள் நம்பிக்கை கொள்ள வேண்டாமா?”**
(அல்குர்ஆன் 21:30)

## அற்புத இறைவேதம்



கி.பி. 570ல் அரேபிய தீபகற்பத்தில் அகிலத்தின் அருட்கொடை அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் பிறந்தார்கள். இக்காலகட்டத்தில் அன்றைய அரேபியப் பாலை நிலம் அறியாமைப் பேரிருளில் மூழ்கிக் கிடந்தது. அந்த அரபகத்தில் பகுத்தறிவு சிந்தனையும், அறிவாராய்ச் சியும் மருந்துக்கு கூட காணப்படவில்லை.

இவ்வாறான சூழ்நிலையில் பிறந்த எம்பெருமனார் (ஸல்) அவர்கள் தமக்கு இறைவனிடமிருந்து வந்த இறை வேதம் என்று ஒன்றை அறிமுகம் செய்கிறார்கள். அந்த இறைவேதத்தை ஆய்வு செய்கின்ற ஒவ்வொருவரும் அது அனைத்து மனித பலவீனங்களுக்கும் அப்பாற்பட்டு தனித் தன்மையோடு விளங்குவதை அறிந்து கொள்ளலாம். மேலும், அவ்வேதம் அதில் சந்தேகம் கொள்பவர்களைப் பார்த்து அதுபோன்ற ஒன்றை கொண்டு வருமாறு சவால் விடுகின்றது.

அழ்ழாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் இறைவேதம் என அறிமுகப்படுத்திய அல்குர்ஆன் ஆன்மீகத்தைப் பற்றி மட்டும் பேசவில்லை. மாறாக, வானவியல் (Astronomy), மருத்துவம் (Medicine), புவியியல் (Geography), இயற்பியல் (Physics), வேதியல்(Chemisty), விலங்கியல்(Zoology), தாவரவியல் (Botany), உயிரியல் (Biology), கருவியல் (Embryology), சமுத்திரவியல் (Oceanography), மண்ணியல் (Geology) உட்பட அனைத்து துறைகளைப் பற்றியும் மிக அழகாகவும், ஆணித்தரமாகவும் பேசுகின்றது. ஒவ்வொரு துறையைப் பற்றியும் அல்குர்ஆன் குறிப்பிடும் போதும் ஒவ்வொரு துறைசார்ந்த நிபுணர்கள், மாமேதைகள் குறிப்பிடுவதனை விட மிக அழகாகவும், துள்ளியமாகவும் பேசுகின்றது.

அருள்மறைக் குர்ஆன் குறிப்பிடுகின்ற இந்த அறிவியல் உண்மைகளையும், திருமறைக்குர்ஆன் இறங்கிய ஆறாம் நூற்றாண்டையும் இணைத்து ஒரு கணம் சிந்திக்கின்ற ஒவ்வொருவரும் நிச்சயமாக, இது மக்காவில் வாழ்ந்த, எழுதப்படிக்கத் தெரியாத முஹம்மது நபி (ஸல்) அவர்கள் சுயமாக பேசியது கிடையாது. பேசவும் முடியாது. மாறாக, இது முக்காலமும் உணர்ந்தவனான அருளாளன் அழ்ழாஹ்விடமிருந்து வந்த இறைசெய்திதான் என்பதை மிகத் தெளிவாகப் புரிந்துகொள்ள முடியும்.

மேலும், இந்த அத்தாட்சிகள் நிறைந்த அற்புத வேதமான அல்குர்ஆன் நிரூபிக்கப்பட்ட விஞ்ஞான உண்மையான பெருவெடிப்புக் கொள்கை பற்றி என்ன சொல்கின்றது என நோக்குவோம்.

## பெருவெடிப்பிற்கு முந்திய பிரபஞ்சத்தின் நிலை

இப்பிரபஞ்சமானது கோள்கள், சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் போன்ற விண்பொருட்கள் தோன்றுவதற்கு முன்னர், அடர்ந்த சூடான வாயுக்களை கொண்டதாக, புகைப் படலமாய் இருந்தது. (The First There Minutes a Modern View of the Origin of the Univere Weinberg PP 94-105). இவ்விஞ்ஞான உண்மையை அருள்மறைக் குர்ஆன் பின்வருமாறு உறுதி செய்கின்றது.

“**பின்னர் வானம் புகையாக இருந்த போது அதை நாடினான். விரும்பியோ, விரும்பாமலோ நீங்கள் கட்டுப்பட்டு நடக்க வேண்டும் என்று அதற்கும், பூமிக்கும் கூறினான். விரும்பியே கட்டுப்பட்டோம் என்று அவை கூறின.**” (அல்குர்ஆன் 41:11)

## பெருவெடிப்புக் கொள்கை (Big Bang Theory)

நாம் இன்று பார்க்கின்ற இப்பிரபஞ்சமானது கிட்டத்தட்ட சுமார் பதினொன்கு பில்லியன் வருடங்களுக்கு முன்னர், மனித கண்களுக்குப் புலப்படாத அடர்த்தி குறைந்த வாயுக்களும், அண்டத் துகள்களும் இணைந்து புகைப்படலமாய் (Nebula) காட்சியளித்தது. மேலும், கடினமான பொருட்கள் யாவும் ஒன்று சேர்ந்து ஒரு சக்தி திரலாக (Ball of Energy) காணப்பட்டன. இவையனைத்தும் சேர்ந்து இப்பிரபஞ்ச புகையுரு கோளத்தின் மத்தியில் நெருப்புப் பிண்டமாக காட்சியளித்தன. இப்பொருட்களின் வெப்பநிலையானது மனிதன் கற்பனை பண்ண முடியாத அளவிற்கு அதிகமாகக் காணப்பட்டது. இப்பொருட்கள் இரசாயன மாற்றத்தாலும், அழுத்தம் மற்றும் வானியல் காரணத்தினாலும் அணுக்கள் சிதைவடைந்து திடீரென வெடித்துச் சிதறி இப்பிரபஞ்சம் முழுவதும் ஒரே தூசு மண்டலமாய் பரவியது. புகை மண்டலமாய் காட்சியளித்த வாயுக்கள் மற்றும் அண்டத் துகள்கள் ஈர்ப்பு விசையின் காரணமாக படிப்படியாக பெரிதாகி நாம் வாழுகின்ற இப்பூமி மற்றும் சூரியன், சந்திரன், உடுக்கூட்டங்கள் மற்றுமுள்ள கோள்களாகவும் மாறியது என்பதுவே பெருவெடிப்புக் கொள்கையாகும்.

இப் பெருவெடிப்புக் கொள்கையானது 1973ம் ஆண்டு விஞ்ஞானிகளால் நிரூபிக்கப்பட்டது. இப்பிர பஞ்சத்தின் உருவாக்கம் பற்றிய விஞ்ஞான உண்மைகளை முதன் முதலில் வெளியிட்டவர்கள் எட்வின் பி ஹூப்பிள் (Edvin P Hubble), ஜோஜஸ் காமோவ் (Geoges Gomow), ஜோஜஸ் லமேட்ரி (Geoges Lamaitro) என்கின்ற விஞ்ஞானிகள் ஆவார்கள்.

பெருவெடிப்புக் கொள்கை என்கின்ற விஞ்ஞான உண்மை விஞ்ஞானிகளால் நிரூபிக்கப்படும் வரை பிரபஞ்சத்தின் தோற்றம் தொடர்பாக பல்வேறு கற்பனைகளையும், கட்டுக்கதைகளையும் அடிப்படையாகக் கொண்டு பல்வேறு நூற்கள் வெளியிடப்பட்டன.

ஆனால், அருள்மறைக் குர்ஆனோ 1400 ஆண்டுகளுக்கு முன்னரே இன்றைய விஞ்ஞானிகள் கூறுகின்ற 'பெருவெடிப்பு' என்கின்ற நிகழ்வின் மூலமான உலக உருவாக்கம் பற்றி இந்த நூற்றாண்டின் மாபெரும் விஞ்ஞான மேதை பேசுவதனை விட மிகத்துள்ளியமாகவும், அழகாகவும் குறிப்பிடுகின்றது. இதனை அற்புத இறைமறை பின்வருமாறு கூறுகின்றது.

**"வானங்களும், பூமியும் இணைந்திருந்தன என்பதையும், அவ்விரண்டையும் நாமே பிரித்தோம் என்பதையும், உயிருள்ள ஒவ்வொரு பொருளையும் தண்ணீரிலிருந்து அமைத்தோம் என்பதையும் (நம்மை) மறுப்போர் சிந்திக்க வேண்டாமா? அவர்கள் நம்பிக்கை கொள்ள வேண்டாமா?"** (அல்குர்ஆன் 21:30)

இப்பெருவெடிப்புக் கொள்கை கண்டுபிடிக்கப்படும் வரை படைப்பாளனான இறைவனை மறுக்கும் நாத்திக சிந்தனையானது இப்பிரபஞ்சத்திற்கு ஆரம்பமும் முடிவும் இல்லை (நிரந்தர பிரபஞ்ச திட்டம்) என வாதிட்டு வந்தது. பெருவெடிப்புக் கொள்கை விஞ்ஞானிகளால் நிரூபிக்கப் பட்டதைத் தொடர்ந்து நிரந்தர பிரபஞ்சத்திட்டம் என்கின்ற வாதம் புதைகுழிக்கு அனுப்பப்பட்டது.

மேலும், பிரபஞ்சத்திற்கு தோற்றம் மற்றும் ஆரம்பம் இருந்தது என்பது பிரபஞ்சம் படைக்கப்பட்டது என்பதனை உணர்த்துகின்றது. படைக்கப்பட்ட பொருள் உண்டு எனில் நிச்சயமாக படைப்பாளன் இருக்க வேண்டும் என்பதும் நாத்திக சிந்தனை என்கின்ற போலி வாதத்தை தகர்தெறிந்து, இப்பிரபஞ்சத்தைப் படைத்து பரிபாலித்து, ஆட்சி செலுத்துகின்ற அல்லாஹ்வின் வல்லமையையும், ஆற்றலையும் பறைசாற்றி நிற்கின்றது. இப்பெருவெடிப்புக் கொள்கையைப் பற்றி கலிபோனியா பல்கலைக்கழக பேராசிரியர் 'ஜோர்ஜ் ரபல்' கூறுகையில், **"பெருவெடிப்பின் காரணமாக பிரபஞ்சமானது பலகோடி ஆண்டுகளுக்கு முன்னால் தோன்றியது என்பதை இன்றைய நவீன விஞ்ஞான உண்மைகள் பறைசாற்றுகின்றன."** என்று கூறுகின்றார்.

இறுதியாக, இம்மாபெரும் விஞ்ஞான உண்மைகளை அறியாமை இருளில் மூழ்கிக் கிடந்த அரேபியப் பாலைவனத்தில் வாழ்ந்த ஒரு மனிதர் சுயமாக கூறியதாக இருக்க முடியாது என்பதையும், முஹம்மது நபி (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதர்தான் என்பதையும், அருள்மறைக்குர்ஆன் இறைவேதம்தான் என்பதையும் இதுபோன்ற விஞ்ஞான கண்டுபிடிப்புக்கள் இன்றைய நவீன உலகிற்கும், நாத்திக சித்தாந்தத்திற்கும் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன.

பெண்கள் பகுதி

# இல்லற வாழ்வும் இன்னல்களும்...

மௌலவி SLM நஷ்மல் [பலாஹி]
nashmelslm@yahoo.com

**"இப்லீஸ் தனது சிம்மாசனத்தை (கடல்) நீரின் மீது அமைக்கின்றான். பிறகு தன் பட்டாளங்களை (மக்களிடையே) அனுப்புகிறான். அவர்களில் மிகப்பெரும் குழப்பத்தை ஏற்படுத்துகின்ற (ஷைத்தான் எவனோ அ)வனே இப்லீஸிடம் மிகவும் நெருங்கிய அந்தஸ்த்தைப் பெறுகிறான். அவனிடம் ஷைத்தான்களில் ஒருவன் (திரும்பி)வந்து 'நான் இன்னின்னவாறு செய்தேன்' என்று கூறுவான். அப்போது இப்லீஸ், '(சொல்லிக் கொள்ளும் அளவுக்கு) நீ எதையும் செய்யவில்லை' என்று கூறுவான். பிறகு அவர்களில் மற்றொருவன் வந்து, 'நான் ஒரு மனிதனுக்கும் அவனுடைய மனைவிக்கும் இடையே பிரிவை ஏற்படுத்தாமல் அவனை நான் விட்டு வைக்கவில்லை' என்று கூறுவான். அப்போது இப்லீஸ், அவனை அருகில் வரச் செய்து, 'நீதான் சரி(யான ஆள்)' என்று (பாராட்டிக்) கூறுவான் என்று அல்லாஹ்வின் தூதர்( ஸல்) அவர்கள் கூறினார்கள்."**(அறிவிப்பவர்: ஜாபிர் (ரழி), நூல்: ஸஹீஹ் முஸ்லிம்-5419)

## சென்ற இதழின் தொடர்ச்சி...

கடந்த இதழில் மணவாழ்வில் மகிழ்வுற இஸ்லாம் திருமணத் தேர்வின் போது தனக்கு அமையப் போகும் மனைவியில் காணப்பட வேண்டிய பண்புகளாக அடையாளப்படுத்துகின்ற தன்மைகளை ஸுன்னாவின் ஒளியில் நோக்கினோம்.

மணவாழ்வை ஒரு வெறும் கேளிக்கையாக கருதாமல் அது ஒரு உயர்ந்த ஸுன்னா என்ற பார்வையில் இஸ்லாம் கற்றுத் தந்த வழிமுறைகளினூடாக அதை அணுகியவர்களுக்கு என்றும் சந்தோஷமே. கடந்த இதழ்களினூடாக, **"தீனுள்ளவனைக் கொண்டு வெற்றியடைந்து கொள்"** (அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரழி), நூல்: புஹாரி-5090) என்ற அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களின் பொன்மொழிக்கமைய நாம் பார்த்த பல அம்சங்கள் மொத்தமாக நற்பண்புகளையே குறித்து நிற்பதைக் காணலாம். இவ்வாறாக, இஸ்லாமிய அணுகுமுறையில் திருமணத்தை

மேற்கொண்ட போதிலும் ஒரு சில தினங்களிலேயே அல்லது ஒரு சில மாதங்களிலேயே சில இன்னல்களுக்கு மணமக்கள் முகங்கொடுக்கவும் செய்கின்றனர்.

நாம் எதிர்பார்த்தது என்ன? ஆனால் திருமணம் என்பது இவ்வளவு இன்னல்கள் நிறைந்ததா? என தலையில் கைவைக்கும் நமது இளசுகளுக்கு இவ்விதழிலிருந்து சில ஆலோசனைகளை முன் வைக்கலாம் என விரும்புகின்றோம். நாம் ஏலவே கூறியது போன்று பொறுமையும், கழாகத்ரை பொருந்திக் கொள்ளும் தன்மையும் உள்ளவர்கள் நிச்சயமாக இவ்விதமாக எழும் சிரமங்களுக்கு இலகுவாக முகங்கொடுப்பார்கள். சங்கடங்களும், சிரமங்களும் இல்லா மணவாழ்வென்பது சாத்தியமேயில்லை என்றாலும் மார்க்கம் கூறுகின்ற விடயங்களை கடைப்பிடித்தால் பெருமளவிலான இன்னல்களைக் குறைத்துக் கொள்ளலாம். கணவன் மனைவியரிடையே ஏற்படும் கருத்து வேறுபாடுகள் நிரந்தரமானதோ அல்லது மணவாழ்விற்கு உலை வைப்பதோ அன்று. இஸ்லாமிய அடிப்படையிலும் உளவியல் அணுகு முறையிலும் நோக்குவோமாயின் ஆங்காங்கே ஏற்படும் சிற்சில கருத்து வேறுபாடுகளை பிரச்சினையின் அடித்தளமாக எடுத்துக் கொள்வதே பிரச்சினையாகும். நாம் மேலே குறிப்பிட்டுள்ள முஸ்லிம் கிரந்த நபிமொழியை அவதானித்துப் பார்த்தால், இன்பமான இல்லறங்களைப் பிரித்து விடுவதையே ஷைத்தான் இலக்காக வைத்திருப்பதைப் பார்க்கின்றோம். தனது மணவாழ்வில் வேளைக்கு தொழுகையின்றி, சினிமா, அந்நியக் கலாசார பழக்கவழக்கங்களோடு அல்குர்ஆன் கற்றல், இஸ்லாமிய பாடங்களைப் பெறல் போன்ற விடயங்களையும் கவனத்திற் கொள்ளாத ஷைத்தானின் தோழர்களான தம்பதிகள் இலகுவில் ஷைத்தானின் இந்த இலக்குக்கு ஆளாகிவிடுவார்கள்.

எனவே, இனி வருகின்ற தொடர்களில் இல்லற வாழ்வில் ஏற்படும் இன்னல்களின் யதார்த்தங்கள், அவற்றை எதிர் கொள்வதின் வழிமுறைகள் போன்ற விடயங்களை நோக்குவோம்.

## இறைத்தூதரின் இல்லங்களில் எழுந்த கருத்து வேறுபாடுகள்.

இல்லற வாழ்வின் இன்னல்களால் துவண்டு போயுள்ள சகோதர, சகோதரிகளுக்கு இத் தலைப்பினைக் கண்டதும் சில நேரங்களில் ஒரு தெம்பு வரக்கூடும். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களின் வாழ்விலும் மனைவியர்களோடு சர்ச்சைகள் ஏற்பட்டுள்ளனவா? ஆமாம். வஹி அருளப்பெற்ற அவ்வில்லங்களிலும் சிற்சில கருத்து வேறுபாடுகள் எழாமல் இல்லை. பின்வரும் சம்பவத்தைப் படித்து பாருங்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுக்கு மிகவும் பிடித்தமான மனைவிதான் அன்னை ஆயிஷா (ரழி) அவர்கள். இப்பாசமிகு மனைவியைப் பார்த்து அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் ஒரு முறை பின்வருமாறு கூறுகிறார்கள். **“என்னிடம் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், எப்போது நீ என்னைக் குறித்து திருப்தியுடன் இருக்கிறாய், எப்போது நீ என் மீது கோபத்துடன் இருக்கிறாய் என்று (உன்னைப் பற்றி) நான் நன்றாக அறிந்து வைத்துள்ளேன் என்று கூறினார்கள். அதற்கு நான், எப்படி நீங்கள் அறிந்துகொள்வீர்கள் என்று கேட்டேன். அதற்கவர்கள், என்னைக் குறித்து நீ திருப்தியுடன் இருக்கும்போது (பேசினால்), முஹம்மதுடைய அதிபதி மீது சத்தியமாக என்று கூறுவாய்! என் மீது கோபமாய் இருந்தால் இப்ராஹீம் (அலை) அவர்களுடைய அதிபதி மீது சத்தியமாக என்று கூறுவாய் என்று சொன்னார்கள். நான் அல்லாஹ்வின் மீதாணையாக! ஆம் (உண்மைதான்) அல்லாஹ்வின் தூதரே! நான் தங்களது பெயரைத்தான் கோபித்துக் கொள்வேன் (தங்கள் மீதன்று) என்று கூறினேன்.”** (அறிவிப்பவர்: ஆயிஷா (ரழி), நூல்: ஸஹீஹுல் புஹாரி-5228)

இது தவிர அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுடன் அன்னாரது அருமை மனைவியர்கள் வாழ்க்கைச் செலவுகள் குறித்து சர்ச்சைப்பட்டுக் கொண்ட போது, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் ஒரு மாத காலம் அம்மனைவியர்களை விட்டும் விலகியிருந்த வரலாறும் பிரபலமானதாகும்.

**“(ஒரு முறை) அபூபக்கர் (ரழி) அவர்கள் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம் (அவர்களது வீட்டுக்கு) வந்து, உள்ளே வர அனுமதி கேட்டார்கள். அப்போது மக்கள் பலர், தங்களில் எவருக்கும் உள்ளே செல்ல அனுமதி கிடைக்காமல் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களது வீட்டு வாசலிலேயே அமர்ந்திருப்பதைக் கண்டார்கள். அனுமதி கிடைத்ததும் அபூபக்கர் (ரழி)**

அவர்கள் உள்ளே நுழைந்தார்கள். பிறகு உமர் (ரழி) அவர்கள் வந்து உள்ளே நுழைய அனுமதி கேட்டார்கள். அவர்களுக்கும் அனுமதி கிடைத்தது. (அவர்களும் உள்ளே நுழைந்தார்கள்.) அப்போது அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் தம்மைச் சுற்றி தம் துணைவியர் இருக்க, பேச முடியாத அளவிற்குத் துக்கம் மேலிட்டவர்களாக மௌனமாக அமர்ந்திருப்பதைக் கண்டார்கள்.

அப்போது அபூபக்கர் (ரழி) அவர்கள் 'நபி (ஸல்) அவர்களைச் சிரிக்க வைக்க எதையேனும் நான் சொல்லப் போகிறேன்.' என்று (மனதிற்குள்) சொல்லிக் கொண்டு, 'அல்லாஹ்வின் தூதரே! என் மனைவி (ஹபீபா) பின்த் காரிஜா என்னிடத்தில் குடும்பச் செலவுத் தொகையை (உயர்த்தித் தருமாறு) கேட்க, நான் அவரை நோக்கி எழுந்து அவரது கழுத்தில் அடித்து விட்டேன் என்றால், நீங்கள் என்ன சொல்வீர்கள்?" என்று கேட்டார்கள். (இதைக் கேட்டு) அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் சிரித்தார்கள். 'இதோ நீங்கள் காண்கிறீர்களே இவர்களும் என்னிடம் செலவுத் தொகையை (உயர்த்தித் தருமாறு) கோரியே என்னைச் சுற்றிக் குழுமியுள்ளனர்' என்று கூறினார் கள். உடனே, அபூபக்கர் (ரழி) அவர்கள் (தம்முடைய புதல்வி) ஆயிஷா (ரழி) அவர்களை நோக்கி, அவர்களது கழுத்தில் அடிப்பதற்காக எழுந்தார்கள். அடுத்து உமர் (ரழி) அவர்கள் (தம் புதல்வி) ஹஃப்ஸாவை நோக்கி, அவர்களது கழுத்தில் அடிப்பதற்காக எழுந்தார்கள். "அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம் இல்லாததை நீங்கள் கேட்கிறீர்களா? என்று அவர்களிருவருமே கூறினர். அதற்கு அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களின் துணைவியர், "அல்லாஹ்வின் மீதாணையாக! அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம் இல்லாத எதையும் ஒரு போதும் நாங்கள் கேட்கமாட்டோம்." என்று கூறினர். பின்னர் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் ஒரு மாதம் அல்லது இருபத்தொன்பது நாட்கள் தம் துணைவியரிடமிருந்து விலகி இருந்தார்கள். பிறகு 'நபியே! உங்கள் துணைவியரிடம் கூறுங்கள்' என்று தொடங்கி, 'உங்களிலுள்ள நல்லவர்களுக்காக மகத்தான நற்பலனை அல்லாஹ் தயார் செய்துள்ளான்' என்று முடியும் (33:28,29) இந்த வசனங்கள் அவர்களுக்கு அருளப்பெற்றன.

இதையடுத்து அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் ஆரம்பமாக ஆயிஷா (ரழி) அவர்களிடம் சென்று, ஆயிஷா! "நான் உன்னிடம் ஒரு விஷயத்தை முன்வைக்க விரும்புகிறேன். அது தொடர்பாக நீ உன் பெற்றோரிடம் ஆலோசனை கேட்காத வரை அவசரப்பட்டு (எந்த முடிவுக்கும் வந்து) விடக் கூடாது என விரும்புகின்றேன்" என்று கூறினார்கள். அதற்கு ஆயிஷா (ரழி) அவர்கள், 'அது என்ன, அல்லாஹ்வின் தூதரே?' என்று கேட்டார்கள். அப்போது அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் இந்த (33:28ஆவது) வசனத்தை ஓதிக் காட்டினார்கள். ஆயிஷா (ரழி) அவர்கள், அல்லாஹ்வின் தூதரே! உங்கள் (உறவைத் துண்டிக்கும்) விஷயத்திலா நான் என் பெற்றோரிடம் ஆலோசனை கேட்க வேண்டும்? இல்லை! நான் அல்லாஹ்வையும், அவனுடைய தூதரையும் மறு உலகத்தையுமே தேர்ந்தெடுக்கிறேன்' என்று சொல்லிவிட்டு, 'நான் கூறியதைத் தாங்கள் மற்றத் துணைவியரில் எவரிடமும் தெரிவிக்க வேண்டாமென உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்' என்றார்கள். அதற்கு அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், 'அவர்களில் எவரேனும் என்னிடம் (நீ சொன்னதைப் பற்றிக்) கேட்டால் நான் அவர்களிடம் அதைத் தெரிவிக்காமல் இருக்கமாட்டேன். அல்லாஹ் என்னைக் கடினமான போக்கு உள்ளவனாகவோ, எவரையும் வழிதவறச் செய்பவனாகவோ அனுப்பவில்லை. மாறாக, (இறைநெறியை) எளிதாக்கிச் சொல்லும் ஆசானாகவே என்னை அனுப்பியுள்ளான்' என்றார்கள்."
(அறிவிப்பவர்: ஜாபிர் பின் அப்தில்லாஹ் (ரழி), நூல்: ஸஹீஹ் முஸ்லிம்- 2946)

இன்ஷா அல்லாஹ் அடுத்து வரும் இதழ்களிலும் இல்லற வாழ்வில் ஏற்படக் கூடிய இன்னல்களுக்கு நபிவழியில் தீர்வு காண்போம்.

**இன்ஷா அல்லாஹ் வளரும்...**

தஃவாக் களம்

# சோதனையில் சாதனை

அபு` அஹ்மத் அல் அதரி
abooahamed@gmail.com

“அல்லாஹ்வின் தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள். இஸ்லாம் குறைந்த எண்ணிக்கை கொண்ட மக்களிடையேதான் தோன்றியது. அது தோன்றிய பழைய நிலைக்கே திரும்பிச்செல்லும். அந்தக் குறைந்த எண்ணிக்கையிலான மக்களுக்கு நன்மாராயம் உண்டாகட்டும்!” (அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரழி) நூல்: ஸஹீஹ் முஸ்லிம்-232)

## சென்ற இதழின் தொடர்ச்சி...

கடந்த இதழில் சத்தியப் பிரச்சாரப் பாதையில் தாருல் அதர் ஆரம்ப கால கட்டங்களில் என்னென்ன விடயங்களை மக்கள் மன்றத்தில் எடுத்து வைத்தது, அதனால் எத்தகைய சிரமங்களை எதிர்நோக்கியது போன்ற விடயங்களைப் பார்த்தோம். அதன் தொடரில்...

எங்கெல்லாம் தௌஹீதின் அஸ்த்திவாரம் பல எதிர்ப்புக்களுக்கும், சோதனைகளுக்கும் மத்தியில் உறுதியாகவும், ஆழமாகவும் போடப்பட்டதோ அங்கு ஆரம்ப கால கட்டங்களில் கொள்கைவாதிகள் கடுமையான சங்கடங்களையும், துன்பங்களையும் எதிர் நோக்கினாலும் ஒரு சில வருடங்களிலேயே அல்குர்ஆன், ஆதாரப்பூர்வமான நபிமொழிகளை நோக்கி மக்கள் விரைந்து வருவதைப் பார்த்திருக்கிறோம். அதனால் சில ஊர்களில் தௌஹீத் வாதிகள் இணைவைப்பாளர்களாலும், மத்ஹபுவாதி களாலும், அதிகார வர்க்கத்தினரின் துணையுடன் கடுமையாகத் தாக்கப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டனர்.

தற்போது போன்று ஸுன்னாவை ஆழமாக அறிந்து செயற்பட வசதியில்லாத காலகட்டங்களில் கப்று வணக்கம், மௌலூத், மூடநம்பிக்கைகள், தகடு, தாயத்து,

மத்ஹப்வாதம் போன்ற விடயங்கள் மட்டுமே பெரும்பாலும் தஃவாக்களத்தை நிரப்பியது. இத்தகைய விடயங்களில் இவ் ஆரம்ப கால கொள்கைவாதிகள் மிக உறுதியாகவே நின்றனர். அவர்கள் குராபிகளுக்கும், அதிகார வர்க்கத்தினருக்கும் ஒரு போதும் தலை சாய்க்கவே இல்லை. தஃவாவை ஒளிவு மறைவின்றி, நெஞ்சுறுதியோடு எடுத்துச் சொன்னார்கள். அந்த வகையில் ஆரம்ப காலங்களில் (நாமறிந்தவரை) அப்துல் ஹமீத் பக்ரி, சகோதரர் பி.ஜே, மீரான் மௌலவி, அதேவழியில் அப்துல் வதூத் (ஜிப்ரி), அன்சார் மௌலவி இன்னும் நாம் பெயர் குறிப்பிடாத பலரும் தௌஹீத் பிரச்சார வரலாற்றில் மறக்க முடியாதவர்கள். இவர்கள் இப்பிரச்சாரத்தில் ஊர்த் தலைமைகள், வழக்காறுகள், உலமா சபைகள் என்ற எந்த அம்சத்தையும் கவனத்திற் கொள்ளவே இல்லை. இதனால் அவர்கள் அப்போதிருந்த குராபிகளாலும், பித்அத்வாதிகளான மூத்த உலமாக்களாலும் 'ஹவாரிஜ்கள்' என அழைக்கப்பட்டனர். மேலும், இவர்களில் பலர் அடிகளுக்கும், தாக்குதல்களுக்கும், சமூகப்பகிஷ்காரங்களுக்கும் உட்படுத்தப்பட்டனர்.

இத்தகையவர்களில் பலர் அப்போது போட்ட அடித்தளங்கள்தான் இன்று அந்தந்த ஊர்களில் அல்குர்ஆன், ஆதாரப்பூர்வமான நபிமொழிகளை மாத்திரம் வாழ்க்கை நெறியாக ஏற்று பிழையான அகீதாக்கள், வட்டி, சீதனம், மடமைகள், மூடநம்பிக்கைகள், கந்தூரி, மௌலூத், பித்அத்கள் போன்றவற்றை விட்டொதுங்கிய ஒரு உயரிய சமுதாயம் உருவானதற்கு காரணமாகும்.

ஆனால், நமது பகுதிகளில் ஆரம்ப காலங்களில் தௌஹீத் சாயம் பூசியிருந்த எமது சகோதரர்கள் கேவலம் அப்பட்டமான ஷிர்க்குகளைக் கூட தெளிவாகப் போட்டு உடைக்கவில்லை. வெள்ளிமேடைகள் வேண்டுமென் பதற்காக கூட்டு துஆ ஓதி, பித்அத்கள் நிறைந்த குத்பாக்களில் பங்கெடுத்தார்கள். பயான் வேண்டுமென் பதற்காக மௌலூத் சபைகளுக்கே சமூகமளித்தார்கள். (தேவையேற்படின் இவற்றை பகிரங்கமாக நிரூபிப்போம்) நாம் மௌலூத் சபைகளுக்கு சென்றாலும் குர்ஆனைத்தான் ஓதினோம் என்று கூறிவந்தார்கள். தூய்மையான முறையில் அல்குர்ஆன், ஆதாரப்பூர்வமான நபிமொழிகளை மாத்திரம் பின்பற்றக் கூடிய தௌஹீத்வாதிகள் பயான்களுக்கு அழைத்தால் செல்லமாட்டார்கள். தலை நகரில் தப்லீக் ஆதிக்கப் பள்ளிவாயல்களில் அடக்கி வாசிப்பார்கள். களம் வேண்டுமென்பதற்காக மூன்று நாட்கள், சில்லாக்கள், ஜுமைராத் பயான்களுக்கும் செல்வார்கள். கேட்டால் அங்கும் தஃவாச் செய்ய முடியும் என்பார்கள். இங்கு சென்று குறைந்த பட்சம் தனிநபர் வழிபாட்டு வழிகேட்டையாவது கண்டித்தார்களா?

புஹாரி மஜ்லிஸ் பயான்கள் பறிபோய் விடுமென்பதற்காக பெரிய பள்ளிகளை விட்டுக் கொடுக்க மாட்டார்கள். பள்ளிவாயல் நிர்வாகிகள் ஊர்த் தலைமைகளது கௌரவங்களை காப்பார்கள். தௌஹீதிற்காக தியாகம் செய்யத் துடிக்கும் நெஞ்சங்களைத் தூசிப்பார்கள். மிம்பர்களில் ஏறினால் அவர்களது பாடுதான். இவை எல்லாற்றிற்கும் மேலாக அவர்கள் அல்குர்ஆன், ஆதாரபூர்வமான ஸுன்னாவினை பிரச்சாரம் செய்வதற்காக அரபு நாடுகளிலிருந்து பணம் பெறும் 'மப்ஊதுகள்'.

இந்நிலையில்தான் இவர் (இத்தௌஹீத்வாதி) களுக்கு முன்னால் சத்தியத்தை சரியான வடிவில் சொல்லப் புறப்பட்ட போது, பித்அத்வாதிகளது எதிர்ப்பை விட இவர்களது எதிர்ப்பே மிகப் பாரிய அளவில் காணப்பட்டது. அல்குர்ஆன், ஆதாரப்பூர்வமான ஸுன்னா அடிப்படையில் தனியாக குத்பா ஆரம்பிக்க முயற்சிகள் எடுத்த போது அதைத் தடுத்து நிறுத்த இயன்றவரை முயற்சித்தார்கள். (ஆனால் அப்போது எம்மோடு அல்குர்ஆன், ஆதாரப்பூர்வமான ஸுன்னா மாத்திரமே எமது இலக்கு என்று உறுதியாக இருந்த பலர் இன்று எல்லோருமாக இணைந்து கரைந்து விட்டார்கள்.)

நபிவழியில் இரவுத் தொழுகை 11 ரக்அத்துக்களை நடாத்தியதால் பிரச்சினை ஏற்பட்டு பொலிஸ் நிலையம் வரை செல்ல வேண்டி வந்த போது, இது அகீதா மட்டும் பேசும் காலமென்றார்கள். இப்போது நம்மை எதிர்க்க வேண்டுமென்பதற்காக மிக அரிதான ஹதீஸ் கலை விதிகளை பயன்படுத்தி பல ஹதீஸ்களை பலவீனமாக்கி வருகிறாரர்கள். இச்சகோதரர்கள் தாங்கியிருந்த மதனி, ரியாழி, கலைமானி, முதுமானி, மற்றும் கலாநிதி ஆகிய பெயர்ப்பலகைகளைக் கண்டு ஏமாந்து போன சகோதரர்களும் இவர்களோடு சேர்ந்து

எமக்கெதிராக பல விமர்சனங்களை மேற்கொண்டனர். (தமது தவறுகளை உணர்ந்த நியாயமாக சிந்திக்கின்ற பல சகோதரர்கள் எமது தஃவாவின் தூய்மையை உணர்ந்து இன்று எமக்கு வெளிப்படையாகவும், மறைமுகமாவும் ஆதரவளித்து வருகின்றனர்)

எமது பிரதேசத்தில் வேரூன்றிக் காணப்பட்ட எல்லாம் அவனே என்கின்ற சித்தாந்தம், தொழுகை நிராகரிப்புக் கொள்கை போன்ற வழிகேடுகளை எதிர்த்து கணிசமான அளவு நாம் பிரச்சாரத்தையும் கொள்கை ரீதியான போராட்டத்தையும் மேற்கொண்டிருக்க, இறுதியில் இவ் அன்புச் சகோதரர்கள் எங்களையும், எங்கள் குடும்பங்களையும் முர்த்தத்களுக்கு நிகராகவே நோக்கினர்.

மேலும், தூய தௌஹீத் கொள்கையின் சரியான அடித்தளம் போடப்படாமையின் காரணமாக சமூகக் கொடுமையான சீதனம் பற்றிய தெளிவு இவர்களிடம் இல்லை. உரிமை மீறல், பிறரின் சொத்தை அபகரித்தல் இஸ்லாத்திற்கே உரிய சிறப்பம்சமான 'மவாரிஸ்' (சொத்துப்பங்கீடு) எனும் பகுதியின் முக்கியத்துவம் போன்ற விடயங்களை ஆழமாகப் புரிந்து கொள்ளாததன் காரணமாகத்தான் 95% இத்தௌஹீத்வாதிகள்(?) இன்னும் பல வருடங்களாக மனைவியின் வீட்டிலேயே குடியிருந்து வருகின்றார்கள். இவைகளுக்கு பிரதான காரணங்கள் உறுதியான தௌஹீத்வாதிகளினைப் போன்று மத்ஹப் சிந்தனைகளைக் கைவிட்டு, அல்குர்ஆன், ஆதாரப்பூர்வமான நபிமொழிகளின் பக்கம் முழுமையாக திரும்பி வராததும், மக்களை அல்குர்ஆன், ஆதாரப்பூர்வமான ஸுன்னாக் களினை மாத்திரம் நோக்கி அழைக்காததுமேயாகும். அப்படித்தான் அல்குர்ஆன், ஸஹீஹுல் புஹாரி, ஸஹீஹ் முஸ்லிம் மொழிபெயர்ப்புக்களைப் படித்து விட்டு கேள்வி கேட்க கூடிய தௌஹீத் சகோதரர்களைப் பார்த்து 'நுனிப்புல் மேய்பவர்கள்' என்று விமர்சிப்பார்கள்.

தாங்களும் ஸுன்னாக்களினை புறக்கணிப்பதோடு மற்றவர்களினதும் ஸுன்னா மீதான பற்றை குறைப்பார்கள். இந்த வகையில் தப்லீக் கொள்கையின் அறியாமைகளையும், இஹ்வானிஸத்தின் அகீதா ரீதியான பிறழ்வுகளையும், ஜமாஅத்தே இஸ்லாமியின் தனிநபர் வழிபாட்டையும், மூத்த உலமாக்களின் மத்ஹப் மாயைகளையும் கண்டிக்காது அனைவரையும் அனுசரித்துக் கொண்டு உலமா சபைகளின் கதிரைகளை இ(த் தௌஹீத்வாதிகளான)வர்கள் அலங்கரித்தே வந்துள்ளனர். இந்த நோய்க்கு இலக்கான பழமையான மதனிகள் நாடு பூராகவும் நிறையவே உள்ளனர். மூத்தோர்களின் அதே பாதையில் இன்றும் அதிகளவிலான இளம்பட்டதாரிகள் காணப்படுகின்றனர். (ஒரு சிலர் விதிவிலக்காக சத்தியப் பிரச்சாரத்தை ஆங்காங்கே முன்னெடுக்கின்றனர்) அல்லாஹ் எல்லோருக்கும் நேர்வழிகாட்டப் போதுமானவன்.

இந்த சகோதரர்களது பிரதான பிரச்சினை நாம் இளம்வயதிலேயே நாடு பூராகவும், சர்வதேச ரீதியிலும் தியாகத்துடனும், உறுதியுடனும் தஃவாவை முன்னெடுப்பதும், அல்லாஹ்வின் அச்சத்தை மாத்திரம் முன்னிறுத்தி ஆய்வுகளை மேற்கொண்டு அவற்றை எடுத்து நடப்பதும், எடுத்துச் சொல்வதுமேயாகும். இதனால் இவ்வன்புச் சகோதரர்கள் தமக்கு கிடைத்த களங்களில் நம்மை நோக்கி செய்த விமர்சனங்கள்:

**முறையாகக் கல்வி கற்காதவர்கள்.**

**அறபுநாட்டுப் பல்கலைக்கழகங்களில் படிக்காதவர்கள்.**

**கௌரவமான குடும்ப பிண்ணனி இல்லாதவர்கள்.**

**வன்முறையாளர்கள்.**

**புத்தகங்களின் ஓரங்களை வாசிப்பவர்கள்.**

இன்னும் இது போன்ற, வாய்திறந்து சொல்ல முடியாத எண்ணற்ற விமர்சனங்களை மேற்கொண்டு வருகின்றனர். இவ்விமர்சனங்கள் தொடர்பாக அருள்மறைக் குர்ஆன் குறிப்பிடுகையில், **"(முஹம்மதே!) அவர்களின் கூற்று உம்மைக் கவலையில் ஆழ்த்த வேண்டாம்.**

**அவர்கள் மறைப்பதையும், வெளிப்படுத்துவதையும் நாம் அறிவோம்."** (அல்குர்ஆன் 36: 86) என்று குறிப்பிடுகின்றது.

**இன்ஷா அல்லாஹ் வளரும்...**

**விமர்சன விளக்கம்**

# சிலதை ஏற்று சிலதை நிராகரிப்போர் யார்?

**விமர்சனம்:** இஸ்லாத்தைப் பிரச்சாரம் செய்யும் நீங்கள் ஷிர்க், பித்அத், நபிவழி போன்ற சிலவற்றுக்கு மாத்திரமே முக்கியத்துவம் கொடுக்கின்றீர்கள். இஸ்லாமிய ஆட்சி, ஜிஹாத், இஸ்லாமியப் பாரம்பரியம் போன்றவற்றிக்கு ஏன் முக்கியத்துவம் கொடுப்பதில்லை? இஸ்லாம் என்பது சம்பூரண வாழ்க்கைத் திட்டமெனக் கூறும் நீங்களே இவ்வாறு சிலதை ஏற்று சிலதை மறுக்கலாமா?.

**விளக்கம்:** **"நம்பிக்கை கொண்டோரே! இஸ்லாத்தில் முழுமையாக நுழையுங்கள்! ஷைத்தானின் அடிச்சுவடுகளைப் பின்பற்றாதீர்கள்! அவன் உங்களுக்குப் பகிரங்க எதிரி"** (அல்குர்ஆன் 02:208) என அல்லாஹ்வே அருள்மறையில் கட்டளையிட்ட பிறகு சிலதை மாத்திரம் ஏற்று சிலதைப் பின்பற்றினால் அதை விட வழிகேடு வேறு எதுவும் இருக்கமாட்டாது. ஓரிறைக் கொள்கையை ஒளிவு மறைவின்றிப் பிரச்சாரம் செய்வதை ஒரே இலக்காகக் கொண்ட நாம் ஒரு மனிதன் எச்சில் துப்புவதிலிருந்து ஆட்சி பீடத்தில் அரசாளும் வரை அத்தனை காரியங்களும் ஆதார பூர்வமான நபிவழியிலேயே அமைய வேண்டுமென்பதே எமது பிரச்சாரத்தின் நோக்கமாகும். ஜிஹாத் எனும் அறப் போராட்டமாக இருந்தாலும் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் எவ்வாறான ஒழுங்கை அதற்கு வகுத்தார்களோ, அப்படியே அவற்றைக் கடைப் பிடித்தால் மாத்திரமே அல்லாஹ்விடம் ஜிஹாத் எனும் வணக்கம் அங்கீகரிக்கப் படுமென நாம் கூறுகின்றோம். 'தடி எடுத்தவனெல்லாம் முஜாஹித்' என இஸ்லாம் கூறவில்லை. மேற்படி விமர்சனத்தை நாம் ஏற்றுக் கொள்கின்றோம். ஆனால் இஸ்லாமிய ஆட்சியையோ, ஜிஹாதையோ நாம் நிராகரிக்கவில்லை. நிராகரித்தால் இறை நிராகரிப்பாளர்களாக மாறிவிடுவோம். (அல்லாஹ் அதை விட்டும் எம்மைக் காத்தருள்வானாக!) எம்மை நோக்கி வீசப்படும் குற்றச்சாட்டில் ஷிர்க்கையும் பித்அத் (நபிகளார் கற்றுத் தராத புதிய வணக்கத்)தையும் கண்டிப்பதில் அதீத கவனம் நாம் எடுப்பது முற்றிலும் உண்மையே! ஏன் முதன்மையாக ஷிர்க் எனும் இணை கற்பித்தலை கண்டிக்கின்றோம் என்ற வினாவுக்கு பின்வரும் அல்குர்ஆன் வசனம் தெளிவாக பதிலளிக்கின்றது.

**"அல்லாஹ்வை வணங்குங்கள்! தீய சக்திகளை விட்டு விலகிக் கொள்ளுங்கள்! என்று ஒவ்வொரு சமுதாயத்திலும் ஒரு தூதரை அனுப்பி னோம். அல்லாஹ் யாருக்கு நேர் வழிகாட்டினானோ அவரும் அச்சமுதாயத்தில் இருந்தனர். வழிகேடு உறுதியானவர்களும்**

**இருந்தனர்.**" (அல்குர்ஆன் 16:36) இறைத் தூதர்களின் முதன்மையான பணியே அல்லாஹ்வுக்குக் கற்பிக்கப்படும் இணையைக் கண்டிப்பது தான். தாயத்து, ஜின் வைத்தியம், மந்திரித்தல், தர்ஹாக் களுக்கு புனித பயணம் மேற்கொள்ளல், சமாதிகளில் மண்டியிட்டு அவ்லியாக்களிடம் பிரார்த்தித்தல் போன்ற மாபாதகச் செயல்களை முதன்மையாகக் கண்டிக்காமல் எவ்வாறு இஸ்லாமிய ஆட்சியைப் பற்றி குரல் கொடுக்க முடியும்? அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் சுமார் பதிமூன்று வருடங்கள் மக்கா நகரில் ஷிர்க்கை ஒழிக்கும் பிரச்சாரத்தில் மாத்திரமே தம்மை முழுமையாக அர்ப்பணித்தார்கள். கொடிய குற்றமான ஷிர்க்கை எதிர்த்துப் பிரச்சாரம் செய்யாமல் நபிகளார் இஸ்லாமிய ஆட்சியை இப்பூமியில் உருவாக்கவில்லை. பகுத்தறிவு ரீதியாகவும் இது சாத்தியமில்லை. ஷிர்கையும், பித்அத்தையும் அதி முக்கியத்துவப்படுத்தி அவற்றைக் கண்டிக்காமல் ஒரு இஸ்லாமிய ஆட்சியை உருவாக்கினால் அந்த ஆட்சி ஒருபோதும் உறுதியாக நிலைத்திருக்காது. இன்று எமது சமூகத்தில் இஸ்லாமிய ஆட்சி பற்றி பல மணித்தியாலங்கள் பேசும் எத்தனையோ சகோதரர்களின் முகங்களில் தூதரின் ஸ{ன்னாவான தாடியைக் காணமுடியவில்லை. முகத்தில் இயற்கையாக வளரும் தாடியைக் கூட தக்க வைத்துக் கொள்ளாத இச்சகோதரர்கள் கிடைக்கும் ஆட்சியை எவ்வளவு தூரம் இஸ்லாமிய வரையறைக்குள் வைத்திருப்பார்கள் என்பது பெரும் சந்தேகமே. ஷிர்க், பித்அத், மூட நம்பிக்கை, மற்றும் ஜாஹிலிய்யத்துக்கள் போன்ற கறைகள் அற்ற அசைக்க முடியாத கொள்கைவாதிகளால் மாத்திரமே இஸ்லாமிய சாம்ராஜியத்தை நிறுவ முடியும் என்பதை விமர்சகர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

## சந்தேகங்களும் தெளிவுகளும்

# தஸ்பீஹ் மணியால் திக்ர் செய்யலாமா?

**சந்தேகம்:** ஒவ்வொரு நாளும் தஸ்பீஹ் மணியினால் நான் திக்ர் செய்து வருகின்றேன். இதனை எனது உறவினர் ஒருவர் 'பித்அத்' எனக் கூறுகின்றார். என்னால் அதனை ஏற்றுக் கொள்ள முடியாமல் இருக்கின்றது. இது தொடர்பான தெளிவை எனக்கு வழங்கினால் பேருதவியாக இருக்கும்.

றிஸ்விய்யா,
தக்வா பள்ளி வீதி,
புதிய காத்தான்குடி. 03

**தெளிவு:** திக்ர் செய்வது என்பது ஓர் வணக்கமாகும். வணக்கங்களைத் தீர்மானிக்கும் அதிகாரம் அல்லாஹ்வுக்கு மாத்திரமே உண்டு. அவனால் அறிவிக்கப்படும் சட்டங்களை மனிதகுலத்திற்கு ஒளிவு, மறைவின்றி எடுத்துரைப்பதுதான் நபிகளாரின் கடமையாகும். முஸ்லிம்களாகிய எம்மை திக்ர் செய்யுமாறு பணித்த அல்லாஹ் தஸ்பீஹ் மணியினால் அதனைச் செய்யுமாறு அல்குர்ஆனில் எங்குமே கூறவில்லை. திக்ர் செய்வதை ஆர்வமூட்டி அதை தன்வாழ்வில் அமுல்படுத்திய அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களும் தஸ்பீஹ் மணிகளைப் பயன்படுத்தி இறைவனை நினைவு கூர்ந்ததாக எவ்வித ஆதாரமும் ஹதீஸ் கிரந்தங்களில் காணக் கிடைக்கவில்லை. இன்று மக்கள் பயன்படுத்தும் தஸ்பீஹ் மணி போன்ற சாதனங்கள் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) காலத்தில் இருக்கவில்லை. ஆனாலும் பேரீத்தங் கொட்டைகளை வைத்தாவது திக்ர் செய்திருப்பார்களா? என ஹதீஸ் நூற்களில் தேடிப்பார்த்தால், எவ்விதச் சான்றையும் அதற்கும் காணவில்லை. அல்லாஹ்வோ, அவனது தூதரோ சம்பந்தப்படாத எந்த வணக்கமும் அல்லாஹ்வின் பார்வையில் உண்மை வணக்கமாக அங்கீகரிக்கப்படமாட்டாது. இஸ்லாமிய வரலாற்றை ஆய்வு செய்கின்ற போது தஸ்பீஹ் மணியினால் திக்ர் செய்யும் நடைமுறை மிக அண்மைக்காலத்தில்தான் முஸ்லிம் சமூகத்தினுள் புகுந்தது என்பதை அறிய முடிகின்றது. இந்துக்களோடு இரண்டறக்கலந்து வாழ்ந்த இந்திய முஸ்லிம்களிடமிருந்துதான் இக்கலாசாரம் முஸ்லிம் களுக்குள் தோன்றியுள்ளது. இந்து முனிவர்களிடம் காணப்படும் 'ஜெபமாலை' யின் மறுவடிவமே 'தஸ்பீஹ் மணி' என்பது வெளிவராத உண்மையாகும். அல்குர்ஆன் ஸஹீஹான ஹதீத்களில் அறவே இடம் பெறாத இந்தக் காரியம் வழிகேடானதும் நரகிற்கு அழைத்துச் செல்வதுமாகும். இக்காரியத்தை எவ்வகையிலும் நாம் அங்கீகரிக்க முடியாது. தஸ்பீஹ் மணியைப் பயன்படுத்தி திக்ர் செய்வது வழிகேடானது என நாம் கூறுவதால்

அழ்ழாஹ்வை திக்ர் செய்வதை மறுக்கின்றோம் என தவறாகப் புரிந்து கொள்ளக் கூடாது. திக்ர் செய்யுமாறு கூறிய நபிகளார் தன் வாழ்வில் பேரீத்தங் கொட்டைகளைக் கூட பயன்படுத்தாமல் விட்டுள்ளார்கள் என்பது பிற சாதனங்களைப் பயன்படுத்தும் சந்தர்ப்பம் இருந்துங்கூட தன் கைவிரல்களினாலேயே அழ்ழாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் திக்ர் செய்துள்ளார்கள் என்பதை எமக்கு துல்லியமாக விளக்குகின்றது. மேற்படி கைவிரல்களால் திக்ர் செய்யும் நடைமுறையே நபிவழியில் ஆதாரபூர்வமானதாகும். நபிகளாரை நேசிக்கும் ஒருவர் கைவிரல்களினாலேயே திக்ர் செய்ய வேண்டுமேயன்றி தஸ்பீஹ் மணியையோ இன்ன பிற சாதனங்களையோ பயன்படுத்தக் கூடாது. அபூஹுரைரா, இப்னு மஸ்ஊத், அபூபக்கர் (ரழி) போன்ற நபித் தோழர்கள் கற்களினாலும் பேரீத்தங் கொட்டைகளினாலும் திக்ர் செய்ததாக தப்லீக் ஜமாஅத் சகோதரர்களின் தஃலீம் தொகுப்பு எனும் நூலில் இடம் பெற்றுள்ளது. மேற்படி இத்தகவல் முழுக்க முழுக்க இட்டுக்கட்டப்பட்டதும் பலவீனமான செய்தியுமாகும். ஆதாரமற்ற இவ்வாறான போலித்தகவல்கள் முஸ்லிம் களிடம் அதி வேகமாகப் பரவியிருப்பதனாலேயே தஸ்பீஹ் மணியினால் திக்ர் செய்யும் பிழையான, ஸுன்னாவுக்கு மாற்றமான கலாசாரம் தோன்றியது.

மார்க்க விடயத்தில் போதிய தெளிவின்மையால் இந்துக் கலாசாரமான 'ஜெபமாலை' அழ்ழாஹ்வின் ஆலயங்களில் ஆணிகளில் தொங்கவிடப்பட்டிருக்கும் துர்ப்பாக்கியத்தைக் காணுகின்றோம். இந்நடைமுறை மாற்றப்பட வேண்டும். இறையச்சத்தை நினைவூட்டுகின்றது என்றும், நல்லவர்களின் அடையாளமெனவும் இந்த தஸ்பீஹ் மணி இன்று உலமாக்களால் போதிக்கப்படுவது மிக வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியதாகும். கைவிரல்களினால் நாம் திக்ர் செய்தால் கரங்கள் பேசும் அந்த மறுமை நாளில் நிச்சயம் அவைகள் எமக்கு சார்பாக சாட்சி சொல்லும் என்பதை நன்றாக சிந்தித்தால் தஸ்பீஹ் மணியை நாம் கையில் எடுக்கமாட்டோம். அழ்ழாஹ் மிக அறிந்தவன்.

**வாசகர்களின் கவனத்திற்கு...**

**மார்க்க ரீதியாக தங்களுக்கு ஏற்படும் சந்தேகங்களை எமக்கு அனுப்பும் சகோதரர்கள் தெளிவாகவும், சுருக்கமாகவும், சுய முகவரியுடனும் தங்களது சந்தேகங்களை alathar@ymail.com எனும் எமது மின்னஞ்சல் முகவரிக்கோ அல்லது "சந்தேகங்களும் தெளிவுகளும்", அல்அதர், தாருல் அதர் அத்தஅவிய்யா, கப்பல் ஆலிம் வீதி, புதிய காத்தான்குடி. 02 எனும் எமது தபால் முகவரிக்கோ அனுப்பி தெளிவுகளைப் பெற்றுக் கொள்ளலாம். (ஆசிரியர்)**

# துஆச் செய்யும் நெஞ்சங்கள்

அல் அதரின் வருகை அசத்தியத்திற்கு நல்ல நெற்றியடி. சத்தியத்தை அறிய ஆவலுறும் மக்களுக்கு நல்ல வழிகாட்டி. பொதுவாக சஞ்சிகை படிக்கும் பழக்கம் எனக்கு அதிகமுண்டு. அவற்றை விட பூரண விருப்பத்தோடு இம்மாத இதழைப் படித்து வருகின்றேன். நான் பெல்ஜியத்தில் பணிபுரிந்தாலும் இலங்கையில் பல தௌஹீத் அமைப்புக்களுடன் தொடர்புள்ளவன். உங்கள் மாத இதழான அல்அதர் மென்மேலும் நல்ல முறையில் வேகமாக வளர எனது பிரார்த்தனைகள்.

**பஜீர் பிறசல்ஸ் நகர் -பெல்ஜியம்** fajeerasge@gmail.com

தாருல் அதரினால் வெளியிடப்படும் மாதாந்த சஞ்சிகையை படித்தவர்களில் நானும் ஒருவன். அதன் ஆக்கங்கள் எனது மனதைக் கவர்ந்தன. மிக விருப்பத்துடன் வாசித்தேன். எழுதப்படும் ஒவ்வெரு விடயத்திற்கும் இலக்கங்களுடன் ஆதாரங்கள் குறிக்கப்பட்டிருந்தது என்னை இவ்விதழை வாசிக்கத் தூண்டிய காரணி எனலாம். பாண்டிச் சேரியில் எனது சக நண்பர்களுக்கும் இதனை நான் அறிமுகப்படுத்தியுள்ளேன். வாழ்த்துக்கள்.

**அப்துல் காதர் பாண்டிச்சேரி, இந்தியா.** kadarmhmd@gmail.com

# ஹதீஸ்களை அடையாளம் காண்போம்.

## ஆதாரபூர்வமான ஹதீஸ்

அல்லாஹ்வின் தூதர்(ஸல்)அவர்கள் கூறினார்கள்: “பாங்கு சொல்வதற்குரிய நன்மையையும் முதல் வரிசையில் நின்று (தொழுவதற்குரிய) நன்மையையும் மக்கள் அறிவார்களானால் அதற்காக அவர்கள் போட்டி போட்டுக் கொண்டு வருவர். யாருக்கு அந்த இடம் கொடுப்பது என்பதில் சீட்டுக் குலுக்கியெடுக்கப்படும் நிலையேற்பட்டாலும் அதற்கும் தயாராகி விடுவர். தொழுகையை ஆரம்ப நேரத்தில் நிறைவேற்றுவதில் உள்ள நன்மையை அறிவார்களானால் அதற்காக விரைந்து செல்வார்கள். ஸுப்ஹ் தொழுகையிலும் இஷாத் தொழுகையிலும் உள்ள நன்மையை அறிவார்களானால் தவழ்ந்தாவது (ஜமாஅத்) தொழுகைக்கு வந்து சேர்ந்து விடுவார்கள்.” (அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரழி), நூல்: ஸஹீஹுல் புஹாரி-615)

## ஆதாரபூர்வமற்ற ஹதீஸ்

“(இளைஞர்களே!) திருமணம் முடியுங்கள்! தலாக் சொல்லி விடாதீர்கள். (நீங்கள் தலாக் சொன்னால்) அல்லாஹ்வின் அர்ஷ் எனும் சிம்மாசனம் நடுங்குகின்றது. அல்லாஹ் ஹலாலாக்கியதில் அல்லாஹ்வுக்கு மிக மிக வெறுப்பானது தலாக் சொல்வது தான்.”

மேற்குறித்த செய்தி நபிகளார் கூறிய செய்தியல்ல. ஏனெனில் அம்ர் பின் ஜமீஃ எனும் பொய்யனால் இட்டுக்கட்டப்பட்டு முஸ்லிம் சமூகத்தில் பரப்பப்பட்ட செய்தியே இதுவாகும். அல்லாஹ் ஒன்றை வெறுத்தால் அதை ஹலாலாக்க மாட்டான். அல்லாஹ் ஹலாலாக்கினால் அதில் அவனுக்கு வெறுப்புக்குரியது என்று ஏதுமிருக்காது. இச்செய்தி இட்டுக்கட்டப்பட்டது எனும் தகவலை மேலதிகமாக அறிய பின்வரும் நூற்களை வாசிக்கவும். “தாரீஹ் அல்-பக்தாத்” (12/191), “அல் மஃஹூஆத் லிப்னுல் ஜவ்ஸி” (2/277)

## அல்லாஹ்வின் மார்க்கத்திற்கு உதவுங்கள்.

அல்லாஹ்வின் செய்திகளை மாத்திரம் சுமந்து வரும் இச்சஞ்சிகையை உங்கள் குடும்பத்தினர் மற்றும் நண்பர்களுக்கு அவசியம் அறிமுகம் செய்யுங்கள். முஸ்லிம் சமூகத்தின் மேம்பாட்டிற்காகவும் மக்களின் அறியாமை எனும் இருளை அகற்றுவதற்காகவும் வெளிவரும் இவ்விதழை அறிமுகம் செய்வதால் அளப்பெரிய நன்மைகளை அல்லாஹ்விடம் பெற்றுக் கொள்வீர்கள்! இச்சஞ்சிகையில் தங்களுக்கு ஏற்படும் அவதானங்கள், மாற்றுக் கருத்துக்கள், விமர்சனங்களை அவசியம் எமக்கு எழுதி அனுப்புங்கள். ஆரோக்கியமுள்ள முஸ்லிம் சமூகத்தை இப்புவியில் உருவாக்கும் திட்டத்தில் நீங்களும் எம்மோடு இணைந்து பணியாற்றுங்கள்! அல்லாஹ் அருள் செய்யப் போதுமானவன்.

# உங்களுக்குத் தெரியுமா?

1. **வினா: எந்த நாளில் முதன் முதலாக குர்ஆன் அருளப்பட்டது?**

   **விடை: திங்கட்கிழமை (ஸஹீஹ் முஸ்லிம்-2153)**

2. **வினா: நபிகளார் தனது இறுதி ஹஜ்ஜுக்காக பயன்படுத்திய ஒட்டகத்தின் பெயர் என்ன?**

   **விடை: அல்கஸ்வா (ஸஹீஹ் முஸ்லிம்-2334)**

3. **வினா: வளமிக்க பள்ளத்தாக்கு என அல்லாஹ் எதை அறிவித்தான்?**

   **விடை: அல் அகீக் பள்ளத்தாக்கு (ஸஹீஹ் முஸ்லிம் 2621)**

4. **வினா: மறுமை நாளில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் முதல் வழக்கு எது?**

   **விடை: கொலைகள் தொடர்பான வழக்கு (ஸஹீஹ் முஸ்லிம்-3466)**

5. **வினா: நபிகளாரின் காலத்தில் எந்த இடத்தில் சந்திரன் இரண்டாகப் பிளந்தது?**

   **விடை: மினா (ஸஹீஹ் முஸ்லிம்-5396)**

6. **வினா: சுவனவாதிகளின் உயரம் எத்தனை முழம்?**

   **விடை: அறுபது முழம் (ஸஹீஹ் முஸ்லிம்-5450)**

7. **வினா: நரகத்தில் காபிர்களின் கடைவாய்ப்பற்கள் எப்படியிருக்கும்?**

   **விடை: உஹத் மலையைப் போன்றிருக்கும் (ஸஹீஹுல் புஹாரி-5479)**

8. **வினா: இறுதிகாலத்தில் உலகை ஆட்சி செய்யும் மனிதனின் பெயர் என்ன?**

   **விடை: ஜஹ்ஜாஹ் (ஸஹீஹ் முஸ்லிம்-5580)**

9. **வினா: எலிகளாக உருமாற்றப்பட்ட ஒரே சமுதாயத்தினர் யார்?**

   **விடை: பனூ இஸ்ரவேலில் ஒரு சாரார் (ஸஹீஹ் முஸ்லிம்-5723)**

10. **வினா: ஒரு இலட்சத்திற்கும் அதிகமான மக்களுக்குப் போதனை செய்த இறைத் தூதர் யார்?**

    **விடை: யூனுஸ் (அலை)(அல்குர்ஆன் 37:147)**